பிறுவெளியீடு. விலை 0—1—3. REGD. NO. M. 4642

# திராவிடநாடு

மலர் 3. இதழ் 27.



## வெற்றிக்கொடி.

# ஆள்தேடுபடலம்.

பாதன்.

"பாதா! திருவொற்றியூர் சண்முகம் இருக்கிறாரே அவருக்கு ஜோதிடம் தெரியுமா?" என்று கேட்டான் வீரன். என்ன விசித்திரமானகேள்வி யப்பா இது. அவருக்கு ஜோதிடத்திலேநம்பிக்கை கிடையாதே, அவருக்கு ஜோதிடம் தெரியுமா என்று கேட்கிறாயே" என்று நான் பதிலுரைத்தேன். நானும் அப்படித்தான் கருதுகிறேன். அவருக்கு ஆருடம் தெரியுமோ தெரியாதோ, அரசியல் ஆருடம் தெரிந்திருக்கிறது-நன்றாக என்றான் வீரன். "எதற்காக இதுபோலச் சொல்கிறாய்" என்று கேட்டேன்.

"வேறுதலைவர்கள் கிடைப்பார்களா என்று தேடித்தேடிப்பார்த்து, அலைந்து அலுத்து இப்போது, நமது பெரியார் ஒருவரே திராவிடநாட்டின் தலைவராக இருக்கக்கூடியவர் என்று, நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்கள் கூறினார். இந்த எண்ணம் இனியும் இருக்குமோ மாறிவிடுமோ, மாறாமல் இருக்கவேண்டும்" என்று சேலம், மாநாட்டிலே தோழர் T. சண்முகம் அவர்கள் கூறினாரே, பாலசுப்பிரமணியம் அவர்கள், வேதாளம் பழயபடி முருக்கமரமேறிக்கொண்டது என்ற பழமொழிப்படி, மறுபடியும் அவருடைய குணத்தைக்காட்டிவிட்டாரே, இதைத்தெரிந்து பேசியிருக்கிறார் பார்த்தாயா, அவ்வளவு அரசியல் ஆருடம் தெரிந்திருக்கிறது பார் அவருக்கு" என்று வீரன் உரைத்தான். உண்மைதான், சேலம் மாநாட்டுக்கு அன்றுவந்திருந்து, மிரண்ட கண்களும் வியர்வைபொழியும் முகமும் தொண்டை வறட்சியும் வெளிப்படையாகத்தெரியும்படி, பலருடையபரிதாபத்தைப் பரிசாகப்பெறக்கூடியவிதத்திலே, பெரியார் வாழ்க! திராவிடத்தலைவரே வாழ்க! காரல்மார்க்சே வாழ்க! என்று கட்டளைக்கலித்துறைபாடிய சண்டே அப்சர்வர் பத்திராசிரியரின் அன்றையபோக்கினைக்கண்டவர்கள், சேலம் மாநாடு முடிந்தபிறகு அவர் கொண்டிருக்கும்கோலத்தைக்காணும்போது, நிச்சயமாகமாநாட்டிலே தோழர் T. சண்முகம் அவர்கள் பேசியதைத்தான் நினைவிற்குக்கொண்டுவந்து, சிரித்திருப்பார்கள், அந்தப் பணிவு, பலருக்குச் சிரிப்பூட்டியதுபோலவே, இப்போது அந்த ஆசிரியரின் வீராவேசமும், பலருக்குச் சிரிப்பூட்டும். தம்முடைய பேச்சாலோ, செயலாலோ, தமிழகத்திலே யாரேனும் கோபங்கொள்வார்கள் என்று பாலசுப்பிரமணியனார் எண்ணினால், அதுதவறு. யாருக்கும் கோபம் கிடையாது, பரிதாபந்தான்பிறக்கிறது, சிரிப்புதான் வருகிறது அவரைநினைத்தாலும்!

விடுவேனா? விடமுடியாது! பார்க்கிறேன் ஒருகை! என்று கோபத்தோடு கூறி, காலையும் கையையும்வீசிக்கொண்டு நடக்கத்தொடங்கி, எதிரிலே வேறுயாரோ வரக்கண்டதும், யாரை ஒருகை பார்ப்பதாக வீரம்பேசினானோ அவனே தான்வந்துவிட்டான் போலும் எனப் பயந்துக் கீழேவீழ்ந்து, "இல்லை, இல்லை! நான் ஒன்றும் செய்யவில்லை. என்னை மன்னிக்கவேண்டும்" என்று கெஞ்சிக் கூத்தாடும், கோமாளிவேடக்காட்சியை நாடகத்திலே கண்டிருக்கிறேன். நண்பர் பாலசுப்பிரமணியத்திடம் பிறகு, ஏன் கோபம் பிறக்கும்! சிரிப்புத்தான்வரும். சகஜம்! கட்சிக்குக் கல்லடியும் சொல்லடியும் வீழ்ந்து, கட்சியினால் பயன்பெற்றவர்கள் காஷாயம்பூண்டு ஓடிக்கதவைத்தாளிட்டுக்கொண்ட நேரத்திலே, அக்கட்சியை நடத்தும் கஷ்டமான காரியத்தை ஏற்றுக்கொண்டு, காலம்பாராது கஷ்டம் பாராது உழைத்து, ஊரிலே ஒருகூட்டத்தை உண்டாக்கிவைத்த பெரியார் இராமசாமி அவர்களைக்கண்டு, அந்தநிழலிலேநடமாடி,நாலுபேரைக் கண்டறிந்துகொண்டதும், நான் கட்சியைச்சீர்திருத்தப்போகிறேன், அதன்முதல் வேலை, பெரியாரை ஒழிப்பது என்று ஒருவர் கூறினால், அந்த ஆசாமி, பைத்யக்காரவிடுதியிலே இல்லாததாலேயே, அவர்பித்தரல்ல, என்று கூறிவிடமுடியுமா? பாரமான வண்டியைக் கரடுமுரடான பாதையிலே இழுத்துச்செல்லும் காளையின்காதுஇடுக்கிலே கடித்துக்கொண்டிருக்கும் "உணி"கூடத்தான் வண்டியைத்தன் வல்லமையாலேயே ஓட்டுவதாகக் கருதிக்கொள்கிறது! பாலசுப்பிரமணியனாரும் அதுபோலவே, தன்னால்தான் கட்சியைத் திருத்தமுடியும் என்று கருதத்தொடங்கினார். அந்த "நோய்" முற்றிவிட்டது, அதற்குச் சேலத்திலே நல்ல "சிகிச்சை" கிடைத்தது என்றே நான் நம்பினேன். இப்போது தெரிகிறது, ஆசாமிக்கு "நோய்" போகவில்லை என்பது. எனவேதான் இந்த "டோஸ்." நோய் தீருமட்டும் டோஸ் தந்தாகவேண்டியபொறுப்பு, எனக்குண்டு, அவர் எனக்கு நண்பராகையால்!

1. சேலம் மாநாடு பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல.
2. அந்த மாநாட்டுக்குப்பெரியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டது முறைப்படி செய்யப்படவில்லை.
3. மாநாட்டுக்கு முன்னாள் இரவு, ஒரு ஒப்பந்தம் நடைபெற்றது, அது நிறைவேறவில்லை.
4. மாநாட்டிலே நிறைவேறிய தீர்மானங்கள், பெரியாரின் ஆட்களின் ஆர்ப்பாட்டத்தால் நிறைவேறின.

இந்த நான்மணிமாலையைக், காட்டுகிறார் ஞாயிறுநோக்கி! இதிலே முதல் மூன்றும், உண்மையென்றால், அன்றைய மாநாட்டிலே அவர் பேசியிருக்கலாம். மாநாட்டுக்கு வரவேகூடாது, முதல் இரண்டும் உண்மையானால்! நடக்கும் மாநாடு, பிரிதிநிதித்வம்வாய்ந்ததல்ல என்று இன்றுகூறும், கண்ணியருக்கு, அன்று, அது தெரியவில்லையா? தெரிந்திருந்தும்வந்தாரா? வரலாமா? முறைப்படிபிரிதிநிதித்வத்தோடுகூடிய மாநாட்டுக்கல்லவா, இவர்போன்ற, 'மேதைகள்' போகவேண்டும்! ஏன்வந்தார்? பிரதிநிதித்வம்இன்றி, தலைவர்தேர்தல் முறைப்படி நடைபெறாமல், கூடியமாநாடாம் சேலம் மாநாடு! இதிலே, இவர் வருவது முறையா? வரலாமா? வந்தாரே, வந்தபிறகாவது, அதைவாய் திறந்து கூறினாரா? ஆளில்லாவிமானத்தைச்செலுத்துகிறார் ஆசிரியர்! மக்கள் எதிரிலேயோ பரமபக்தராகப்பேசினார், அன்று!

மாநாட்டுக்கு முன்னாள் இரவு ஒரு ஒப்பந்தம் நடைபெற்றதாம்—கனவான்களின் ஒப்பந்தமாம் அதற்குப் பெயர், அதிலே இரண்டு கட்சிகளாம், ஒன்றிலே தோழர்கள் பாண்டியனார், V. V. இராமசாமி K. A. P. விசுவநாதன், சேர்மன் இரத்தினசாமி, C.G. ரெட்டோ, வக்கீல் கணேசசங்கர், ஆசிரியர் பாலசுப்பிரமணியம்,ஆசிரியர் திருமலைசாமி, அ. பொன்னம்பலனார் ஆகியோராம், மற்றொரு கட்சியிலே அண்ணாத்துரையும் அவருடைய நண்பர்களும் இருந்தனராம். இந்த இருதரப்பினரும்பேசி ஒரு ஒப்பந்தத்திற்கு வந்தனராம், அது மீறப்பட்டுவிட்டது என்று சண்டே அப்சர்வர், கூறுகிறது.

இதுகுறித்துத் தோழர் அண்ணாத்துரையின் கட்டுரை தெளிவுஉண்டாக்கும்என்றுஎண்ணுகிறேன். நிற்க, மாநாட்டிலே, தீர்மானங்களை எதிர்த்து வெற்றிபெறமுடியாது வீடுதிரும்பிய வீரர்,விவேகத்தோடுசெய்திருக்கவேண்டியது ஒன்றுதான், அதாவது, இந்தக்கட்சியிலே இனி நான் இருக்கமாட்டேன்! என்றுகூறிவிடுவது. இவரை இழந்துவிட்டால் கட்சியின் இருதயத்தை இழந்துவிட்டதற்குச் சமானமாகும் என்றுகருதும் தோழர்கள், தாங்களும்விலகி, புதியதோர்கட்சியை அமைத்திருக்கவேண்டும். காரியவாதிகளுங்கூட அதைத்தான்செய்திருப்பார்கள். யூகமுள்ளவர்களும் அதுவேமுறை என்பார்கள். கலகத்தாலே மட்டுமே காலந்தள்ளமுடியும் என்ற கருத்துடையோர்மட்டுமே, குறுக்குவழி நடப்பர். நண்பர் பாலசுப்பிரமணியம் அந்தக் குறுக்குவழியிலே நடக்கிறார், இடறிவிழு

(10ம் பக்கம் பார்க்க)

# அடிமை மக்கள் விடுதலை.

கரந்தை பெரியசாமிப் புலவர்.

*சென்றவாரத் தொடர்ச்சி*

நம் நாட்டில், ஆரியம் எத்துணையோ ஆயிரம் ஆண்டுகட்குமுன் சோமரசம் என்ற ஒருவகைக் கள்ளைக்குடித்துவிட்டு ஆரிய முனிவர்கள் பாடியசுலோகங்களை அடிப்படையாகக்கொண்டு, அச்சுலோகங்களையே சட்டமாக்கி நம்மை ஆண்டுவருகின்றது. குடிவெறியில் பாடினார்களென்பதற்கு வாம ஆகமம் சான்றுபகர்கின்றது. வெள்ளைப்பூண்டை வியாசரென்றும், வெங்காயத்தைச் சுகதேவர் என்றும், தூரஸ்திரீயும் வியபசாரியுமாயுள்ள ஒருத்தியை யோகினிஎன்றும் வாமஆகமம் கூறுகின்றது.

நம்நாட்டு ஆதித்திராவிடர்களைச் சண்டாளர்கள் என்றும் ஆரியர் அழைக்கின்றனர். நூலிலும் எழுதியமைத்துள்ளனர். சண்டாளர்க்கிலக்கணம் அவர்கள் நூலில் இவ்வாறுகூறப்பட்டுள்ளது. பிராமணப்பெண்ணுக்கும் சூத்திரனுக்கும் பிறந்தவன்சண்டாளன் என்பதே. அவர்கள் நூலில் கூறியசெய்தியை உண்மையென யாம் ஒப்புக்கொள்ளுவோமாயின் இந்தியாவில் ஒரு ஆறுகோடி ஆதித்திராவிடர்கள் உளர், இவர்கள் அனைவரையும் சண்டாளர்களெனின் இவர்களைப்பெறுதற்கு எத்துணைப்பிராமணப்பெண்கள் சூத்திரர்களுடன்சேர்ந்து வியபசாரம் செய்திருக்கவேண்டும்? இச்சுலோகங்கள் யாவும் குடிவெறியில் பாடியனவாகலின் இவற்றை அப்படியே யாம் ஒப்புக்கொள்ளவேண்டுமென இந்நாட்டுப்பார்ப்பனர் நம்மை வற்புறுத்திக்கூறுவார்களானால், இச்செய்திகள் யாவும் அவர்கட்கு மானக்கேட்டை விளைவித்து, இழிவை உண்டாக்காவோ? திராவிட வாலிபர்களே! இவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்துத்தள்ளுவன தள்ளி, நம் திராவிட நாட்டைத்தனியே பெற்றுவீறுகொள்வீர்களாக.

பரட்சி இயக்கமின்றி எந்நாட்டு மக்களும் விடுதலையடைந்ததாக யாம் கேள்வியுற்றோமில்லை. பிரான்சு நாட்டின் பெரும் புரட்சி உங்கட்கு ஊக்கம் ஊட்டுமாகையால் சிறிது விரித்துக்கூற விரும்புகிறேன். கி. பி. 17-ம் நூற்றாண்டில் பிரான்சு நாட்டில் ஒரு பெரும் புரட்சி நிகழ்ந்தது. அப்புரட்சி இயக்கம் மாறுபாடான நோக்கங்கொண்டோ தன்னலஎண்ணங்கொண்டோ நிகழவில்லை. அந்நாட்டில் இப்புரட்சி நிகழுமுன் நீதியற்ற ஆட்சி நிலவியது, கொடுங்கோன்மை நாடெங்குங் கொண்டாடப் பெற்றது. மக்களுள் உழுது பயிரிடும் குடியானவன் உழைப்பிற்குத் தக்க கூலியும் கிடைக்கப்பெறாமல் அந்நாட்டாட்சியினர் துன்புறுத்தினர். தொழிலாளிகள் முதலாளிகளின் அடிமைகளாய் நடத்தப்பட்டு வந்தனர். அக்காலை அந்நாட்டுக்கு அரசர்தான் இட்டதே சட்டம் கொண்டதே கோலமென ஆட்சி ஆர்ப்பாட்டம் புரிந்து வந்தனர். இவற்றைப் பொறுக்க மாட்டாத மக்கள் நியாயமும் சம உரிமையும் வேண்டிக் கிளர்ச்சி ஒற்றெழுந்தனர். தங்கள் பிறப்புரிமையைப் பெறுவதற்கு முடியாட்சியை ஒழித்துக் குடியாட்சியை நாட்டவேண்டுமெனத் துணிந்தனர். அதற்காக உடல் பொருள் ஆவிகளால் அரும்பெரும் பணிகளை (தியாகங்களை) யாற்றினர். அதன்பயனாக ஏதேச்சாதிகாரமுள்ள முடியரசினுடைய ஆட்சிக்கு மாறாகப்பிரான்சு சமத்துவமும் சமதர்மமுள்ள குடியாட்சியாய் மாற்றமுற்றது. இத்தகைய வரலாற்றை உலகம் மறக்க முடியுமா?

## அந்நாட்டின் பழைய நிலைமை

பதினேழாம் நூற்றாண்டின் இறுதியில் பிரான்சு தேச அரசாங்கச் சட்டதிட்டங்கள், ஆட்சியாளரின் ஆணைகள் யாவும் பொதுமக்களுடைய விருப்பத்திற்கு நேர் முரணாகவே இருந்து வந்தன. குடிமக்களாகிய பொதுமக்களின் சொத்து, சுதந்திரம், செல்வம், சாதனம், யாவற்றிற்கும் உரிமையாளன் அரசன்தான் என்ற இழிந்த எண்ணம் பிரான்சில் அக்காலை நிலைத்திருந்தது. ஆகவே குடிமக்களின் உழைப்பால் வரும் பொருள்களெல்லாம் அரசாங்கக்கருவூலத்தில் (கஜானாவில்) போய்ச்சேரும். அரசாங்க நிதி யெல்லாம் அரசனுடையவும், ஆட்சியாளருடையவும் விருப்பம்போல் கண்ட வழிகளில் செலவழிகிறதே என்று ஒருவரும்சொல்லக்கூடாது. அங்ஙனம் கூறின், கூறியவர் அடுத்த கணத்தில் சுட்டுக்கொல்லப்படுவர். அக்காலை ஆட்சிக் கூட்டத்தினர் தம்செலவினங்கட்கும் திட்டங்கட்கும் பொது மக்களிடமோ தலைவர்களிடமோ ஆலோசனை ஒன்றுங் கேட்கமாட்டார்கள். எனவே அவ்வாட்சியாளரின் விருப்பமே சட்டமாக இருந்து வந்தது. ஆகவே சட்டத்தொடர்பான விசாரணையோ நியாயமோ அக்காலை பிரான்சில் ஒரு சிறிதும் இல்லாதிருந்தது.

## அந்நாட்டுக் குடிமக்களின் கிளர்ச்சியும் எழுச்சியும்

குடிமக்கள் இக்கொடுமைகளைப் பொறுக்க மாட்டாமல் சீற்றங்கொண்டு கிளம்பினர். தாங்கள் அவ்வரசாங்கத்திற்கு அடங்கிக் கிடக்கவேண்டியபேதைக் குடிகள் என்ற எண்ணத்தை தம் உளத்தினின்றும் அப்பால் அகற்றி விட்டனர். மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் உரிமையுடையர், எவனுக்கும் எவரும் அடிமையிலர். நீதிக்கும் அறத்திற்கும் கட்டுப்பட வேண்டுமேயல்லாது கொடுங்கோன்மைக்கும் ஏதேச்சாதிகாரத்திற்கும் கட்டுப்படவேண்டியதில்லை என்ற ஒரு வீர எழுச்சி மக்களிடையே எழுந்தது. அங்ஙனம் புத்துணர்ச்சி பூண்ட அக்காலைய பிரான்சு மக்கள் ஒருபுதியக்கத்தைஉண்டாக்கி வைத்துவிட்டனர் எனலாம்.

## அடங்காது எழுந்த அரும்பெருங் கிளர்ச்சிகள்.

பிரான்சுச் சட்டமன்றங்களில் மட்டும் சிறிது ஊழல்கள் இருந்தன. மதத்தொடர்பான செய்திகள் வாதத்திற்குவந்தால் சிறிது சச்சரவு தோன்றும், ஆகவேபிரான்சில் புரட்சியை யுண்டு பண்ணிய நாட்டுப் பற்றுள்ள இளைஞர்கள் அந்தச் சச்சரவும் நிகழாதவாறு செய்து விட்டனர்.

அதற்குமுன் சட்டசபைகளில் அரசருக்குத் தனிப்பட்ட பிறாது அறிவுறுத்தல்களை தட்டிவிட்டுத் தன் விருப்பப்படியே சாதித்துக்கூறும் சலுகைகள் இருந்து வந்தன. பின்னர் தோன்றிய பிரான்சின் புரட்சி இயக்கமானது அரசரின் அத்தகையதான்தோன்றித்தன்மைகட்கு இடமாயுள்ள உரிமைகளையும் வேரோடு பெயர்த்து எறிந்துவிட்டது. அரசர் வறிதேதம்கருத்துகளைத்தான் கூறலாம், அரசர் தம் விருப்பப்படி ஒரு பாதிரியாரை அங்கு நியமிக்கவோ வேறொருவரின் இடத்தைக்காலிசெய்யவோ அதிகாரம் இல்லாதபடி நிலைமை மாறிவிட்டது.

அதன்பின் பிரான்சு மக்கள் தாங்கள் நடத்திவந்த புரட்சியில் சற்று வரம்பைக் கடந்து விட்டனர், அக்காலம் இங்கிலாந்தும் அமெரிக்காவும் எங்ஙனம் இருந்து வந்தன என்பதையும் அறிந்து பின்பற்றி நடக்காமல், தங்கள் பிரான்சில் முடிமன்னரின் ஆதிக்கத்தையே தகர்த்தெறியத் தொடங்கி விட்டனர், ஏனெனில் அவ்வரசர் குடிமக்கள் தலைவர்களுடைய (அவர்களிற் பெரும்பாலோருடைய) கருத்துகளுக்கிணங்கி நடைபெறும் சட்ட மன்றத்தின் நடைமுறைக்கெல்லாம் தாம் தலை சாய்த்து நடக்க முடியாதென முரண்பட்டார். ஆகவே சட்டமன்றஉறுப்பினர்கள் அச்சமயத்தே நடப்புமுறைச் செய்திகளைச் சரிவர நடத்த முடியாது அல்லலுற்றுக்கொண்டிருந்தனர். இவ்வாறு அரசரின் ஏதேச்சைப் போக்குத் தேச அரசியலுக்குப்பிடித்தமில்லாதுபோகவே அரசருக்கு மாறாகக் கிளர்ச்சி தொடக்கமாயிற்று.

எனவே, ஒரு புதுக்குழு ஏற்பட்டது. இக்குழு அரசரின் ஆணையின்றி அரசி

(4-ம் பக்கம் பார்க்க)

## அடிமை மக்கள் விடுதலை.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

யலுக்கு வேண்டிய அலுவலாளர்களைத் தேர்ந்தெடுத்துக்கொண்டது. அத்துடன் மக்களுக்கு ஆதரவான பல வேலைகளில் ஆண்மையுடன்வேலைசெய்தது. அக்காலை சாராயம், உப்பு, புகையிலை இவைகள் வாயிலாக வரிப்பணம்முப்பது லட்சம் பவுன்கள் அரசாங்கத்திற்கு அதிக வருமானம் வந்துகொண்டிருந்தது. புதிய குழூஉ அவ்வரிகளைத் தகர்த்தெறிந்தது. இதனால் ஆட்சியாளர்களின் படிச்செலவுகட்கு இடையூறு ஏற்பட்டது.

நாட்டில் முறைப்படி மற்றொரு ஆட்சி மன்றம் அமைக்க ஓர் மாநாடு கூடிற்று அந்தக் கூட்டின் சிறந்த நோக்கம் எல்லா வழிகளிலும் பொதுமக்களிடை எழுந்தது. அங்ஙனம் புத்துணர்ச்சி பூண்ட அக்காலைய பிரான்சு மக்கள் ஒரு புத்தியக்கத்தையும் தோற்றுவித்தனர். "பொதுமக்களுடைய விருப்பம்தான் சட்டம். பொதுமக்கள் ஒருமுகமாய் ஒப்புவதுதான் நியாயமென்ற உணர்ச்சி பரவலாயிற்று. எனவே, சட்டங்களை இயற்றிக்கொள்ளவும் அதனை நடை முறைக்குக்கொண்டு வரவும் குடிமக்களான ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு என்னும் உணர்ச்சி தலையெடுத்தது. மக்களுடைய தலைவர்கள் சேர்ந்து ஒரு மனதாக முடிவு செய்வதுதான் அரசாங்க சட்ட திட்டங்களாய்இருக்க வேண்டுமென்ற கொள்கைகளைக் கொண்ட ஓர் பொது அறக்கூட்டம் (சமதர்மக்கோட்டி) பிரான்சில் தோன்றிற்று. அக்கூட்டத்தினர் தங்கள் குறிக்கோளுடன் அரசாங்கத்தை மாற்றி அமைத்துவிட உலையா முயற்சியை மேற்கொண்டனர். தேய நலத்திற்காகவும் சமுக உயர்விற்காகவும் அரும் பெரும் பணிகளைப் புரிந்தனர். கி. பி. 1790-க்கு முன் பிரான்சு அரசாங்கத்தில் குடிமக்கட்கு எத்தகைய சுதந்தரமும் கொடுக்கப் பெறவில்லை. குடிமக்கட்கு வேறு சட்டம். ஆட்சியாளர்கட்கு வேறுசட்டம், செல்வந்தர்கட்கும் முதலாளிகட்கும் வேறு சட்டங்கள், இவ்வாறு ஆளுக்கொரு சட்டமாக நேரத்திற்கொரு நடை முறையாக ஆட்சி யிருந்தது.

இந்நீதியற்ற அட்டூழியங்கள் எல்லாம் 1791-ம் ஆண்டிலேயே ஒழிக்கப்பட்டு விட்டன. அதிலிருந்து குடிமக்கட்கு சமத்துவமும் நீதியும் கிடைத்து வரலாயின. பத்திரிகைகளுடைய இழந்து போன உரிமைகளும் அவைகட்குக் கிடைத்தன. குடிமக்களே ஆட்சிபுரிவதற்குப் புதுமையும் நேரிதுமான அறத்தொடு பட்ட சட்டங்கள் இயற்றப்படலாயின. ஆட்சி புரிவோர் பாதிரிகள், செல்வந்தர்கள் நிலக்கிழவர்கள் எல்லோருக்கும் ஒரே நன்மையான நீதியின் உரிமைகிடைக்கப் பெறலாயின.

## கிளர்ச்சியின் பயனால் கிடைத்த நன்மைகள்

அக்கிளர்ச்சியின் காரணத்தால் அரசியல் நடைமுறையில் பலமாறுதல்கள் ஏற்பட்டன. (பரம்பரையாகத்) தலைமுறை தலைமுறையாக ஒரே அதிகாரிக்குக் (சார்பார்) கிடைத்துவந்த பட்டங்களும் பதவிகளும் மற்றைய பெருமைகளும் புதிய சீர்திருத்தத்தின் பயனாகத்தொலைந் தொழிந்தன. எல்லாப் பொது நிலையங்களிலும் பொதுமக்கட்டலைவர்களில் தகுதியானவர்களுக்கே பதவிகள் அளிக்கப்படலாயின. வருமான வரிகளும் நில வரிகளும் அவரவர்களுடைய ஊதியத்திற்கேற்ற வருவாய்க்குத் தக்கபடியே விதித்து வாங்கத் தொடங்கினர். ஒரு மண்டிலத்திற்கும் மறு மண்டிலத்திற்கும் எத்தகைய வேறுபாடு மின்றி எங்கும் சமத்துவம் ஏற்படுத்தப்பட்டது.

சிறிய ஊர்களிலும் பெரிய பட்டினங்களிலும் ஒரேவிதமான ஆட்சி நடைபெறுவதாயிற்று. சுருங்கக் கூறுமிடத்துச் சட்டதிட்டம், வழக்கு, விசாரணை நியாயம் இராணுவ அமுல், அரசியல் பொறுப்புகள் (நிர்வாகம்) மானிய அறங்கள் யாவும் புதுமுறையில் மாறின.'

இக்கூட்டத்தில் இனி அரசருக்கு இன்னின்ன அதிகாரமும் வேலையுந்தான் இருக்கவேண்டும்; மற்றைய செய்திகளில் அரசர் தலையிடக்கூடாது என்ற கட்டுப்பாடுவகுத்தனர். எல்லாஆட்சிக்கழகங்களிலும் மூன்றில் ஒருபங்கு 1/3 புதிய அலுவலாளர்கள் நியமனமானார்கள். முடியாட்சிக்கு எதிராகப் புரட்சிசெய்தார்கள் என்று தூக்குத்தண்டனைக்காகச் சிறையில் அடைக்கப்பட்டிருந்தவர்கள் யாவரும் விடுவிக்கப்பட்டனர். அங்ஙனம் விடுவிக்கப்பட்டவர்க்குப் போர்ப்படையில் (இராணுவம்) தளபதி (தலைவர்) அலுவல்கள் கொடுக்கப்பட்டனர். அங்ஙனம் ஏற்பட்ட சபையின்மூலம் முடியரசாட்சிக்கு எதிரிடையான கிளர்ச்சி தீவிரப்புரட்சியாகமாறிற்று. இச்செய்திக்கு இறங்காதவர்கள் என்றுமுடிவுசெய்யப்பட்ட 2505 பேர்களுக்குப் பாரிஸில் ஒருசேரத்தீடிரென்று மரணதண்டனை விதிக்கப்பட்டது. புரட்சிக்காகப் புதுப்படைசேர்க்கப்பட்டது. இதற்காகக் கட்டாய இராணுவமுறை கையாளப்பட்டது. மேலும் நாட்டில் வாணிபப்பொருள்களுக்கெல்லாம் நியாயமான விலைமுறைகள் ஏற்படுத்துவதற்காகஓர்புதுச்சட்டம்போடப்பட்டது. அச்சட்டத்தின்மூலம் பொருளாதாரம் உள்நாட்டு வாணிபம்யாவும்சீர்பெற்றன. இன்னும் உள்நாட்டில் விளையும் கோதுமை முதலிய தானியங்களை வெளிநாட்டிற்கனுப்புகிறவர்கட்கு மரண தண்டனை என்று சட்டம் ஏற்படுத்தப்பட்டது. யாரேனும் இங்கிலாந்திடமிருந்துவாணிபப்பொருள்களை வாங்குதல் அல்லது கொடுத்தல் செய்தால் அவர்கட்கு இருபதாண்டு சிறைத்தண்டனை என்று ஏற்படுத்தப்பட்டது.

மேற்படி புரட்சிக்கு மாறுபாடாக அஃதாவது பழைய முடியரசாட்சியை ஆதரித்து எந்தப் பத்திரிகையும் தம்கருத்துக்களை வெளியிடக் கூடாதென்று கண்டிப்பான தடை விதிக்கப்பட்டிருந்தது. அவ்வாணைமீறிச் செய்தியை வெளியிட்ட பத்திரிகாசிரியர்கள் சிலர் தூக்குமேடைகளுக்கு அனுப்பப் பட்டு வந்தார்கள். அது மட்டுமல்ல, அப்படி வெளியிடுவோரது அச்சுப் பொறிகளும் அச்சுக் கருவிகளும் பறிமுதல் செய்யப் பட்டு அவையெல்லாம் புத்தியக்கத்தை ஆதரித்தெழுதும் ஏனைய பத்திரிகைகட்கு அளிக்கப்பட்டு வந்தன.

அங்ஙனம் அக்காலை 54 பத்திரிகைகள் பறி முதலாயின. 67 பத்திரிகாசியர்கள் நாடு கடத்தப்பெற்றனர். சிலர் தூக்கு மேடையும் ஏறினார்கள். நெப்போலியன் போனபார்ட்,காலத்தில் 13பத்திரிகைகள் இருந்தன. அவை புதிய புரட்சியின் காரணமாய்த் தொலைந்துபோய் 4 தான் எஞ்சி நின்றன. இவையும் பின்னர் தொலைந்து ஒரே ஒரு பத்திரிகைதான் நிலைத்திருந்தது.

குடியாட்சி முறை நிலவியது நாளுக்கு நாள் பிரான்ஸ் தேசம் மற்றை நாடுகளை விடக் குடியரசு ஆட்சிமுறையில்சீர்பெற்றுத் தழைத்தோங்கியது. இத்தகைய பிரான்ஸ் இப்பொழுது நாஜிய ஹிட்லர் கையிற் சிக்குண்டது. ஐரோப்பிய நாடு முழுவதும் பிரான்சைப் புகழும்வண்ணம் அது மாறினதற்குக் காரணம் அந்தப் புரட்சிதான் அன்றோ! அத்தகைய புரட்சியியக்கமின்றி இந்நாட்டில்ஏற்பட்ட வகுப்பினராகிய நீவிர் இந்நாட்டுப் பொருளாதார அரசியலில் ஏதேனும் நன்மைபெறவியலுமா? அப்புரட்சிக்கு அடிப்படைதான் திராவிடநாடுதிராவிடர்க்காக வேண்டுமென்பது.

## சந்தாதாரர்களுக்கு.

"திராவிட நாடு" சந்தாதாரர்களிற் பலர் சந்தாத்தொகையை அனுப்பாமல் இருக்கிறார்கள். இவ்வறிக்கையைக்கண்டதும் பாக்கிவைத்திருப்பவர்கள் உடனே தொகையை அனுப்புவதோடு, பணம் அனுப்பும்போது தங்கள் சந்தாநம்பரையும் குறிப்பிட்டனுப்பும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

**மானேஜர்.**

## திருமணம்

நாகலூரில் தோழர் பக்கிரிசாமிக்கும் தோழியர் அஞ்சலையம்மைக்கும் தோழர் K. K. நீலமேகம் அவர்கள் தலைமையில் 25—8—44ல் வாழ்க்கை ஒப்பந்தம் நடைபெற்றதை முன்னிட்டுத் திராவிட நாடு வளர்ச்சிக்கு ஒரு ரூபா நன்கொடை தரப்பட்டது.

தொடர் கதை,

★

சௌமியன்.

# பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:—பார்வதியின் அன்புக்குப் பாத்திரமான குமார்மீது பழிசுமத்திய பார்த்திபன் என்ற கபடன், லோபி ஆலாலசுந்தரரின் சொத்துமூலம் நாட்டுக்குத் தலைவனாகலாம் என்று மனப்பால்குடிக்கிறான். அவன்நடத்திய மாநாட்டிலே பார்வதியால் கலகம்விளைகிறது. அவனால் நிராகரிப்பட்ட ஜெயா எனும் தாசி, எழுதிய கடிதத்திலே, குமார்பற்றிய தகவல் கொஞ்சம் தெரிகிறது. பார்வதி, தன்சினேகிதி லலிதாவுடன் அதுபற்றி ஆலோசிக்கிறாள், அவர்களை அக்ரமமாகப் பேசி அனுப்புகிறான் பார்த்திபன். அவன் தங்கியிருந்த ஒட்டல் சொந்தக்காரரான சங்கர ஐயர், பார்த்திபனிடம் பேசுகிறார் பிறகு............]

திக்கற்றோர் திருச்சபை என்ற பெயரைக்கேட்டதுமே பார்வதிக்கு, அங்கு போகவேண்டுமென்ற ஆவல்பிறந்தது. எத்தனையோ சபைகள், எது எதற்கோ சபைகள் உள்ளன. ஒவ்வொருசபையும் ஒவ்வொரு உள்ளெண்ணத்தோடு நடத்தப்பட்டுவருவது பார்வதிக்குத்தெரியும். திக்கற்றோர்சார்பாக ஒருசபைஇருப்பது கேட்டு அவள் அடைந்த சந்தோஷத்துக்கு அளவில்லை. வறுமை எனும் தேள் கொட்டி, விஷம்ஏறி உருமாறிப்போனவர்களும், வாழும் வழிஇழந்து பாழுங்கிணறுதேடும் பாமரர்களும், இராத்திரி எதாகிலும் பிச்சை கிடைக்காதா என்ற ஏக்கத்தோடு பகல்பட்டினியாக இருப்பவர்களும், பெற்றோர் திடீரென்றுஇறந்துபோனதால், வீதியிலே அலையநேரிட்டவர்களும், விழிஇழந்தோர், காமிலாதார், முடவர், ஊமை, பெருநோய் கொண்டோர் என்று திக்கற்றுக்கிடக்கும் பலருக்கு ஒரு திருச்சபை இருந்தாகவேண்டும் என்று பார்வதி பல சமயங்களிலே எண்ணியதுண்டு. அழகான செவ்வானம், அற்புதமானநிலவொளி, சிற்றாறு, சிங்காரமாளிகை, சிரித்திடும் முல்லை, கண்ணைப்பறித்திடும் ரோஜா, மாடமாளிகை மணிமண்டபம், தவழும் குழந்தைகள், இளந்தளிர் எனும் பல்வேறு காட்சிகளைக் கண்டுகளித்த சமயங்களில் எல்லாம், இக்காட்சிகளைக்காணமுடியாமல் எவ்வளவுபேர் குருடாகிக்கிடக்கின்றனர், என்பதை எண்ணிப்பார்வதி உள்ளம் குமுறுவதுஉண்டு. செல்வமும் சுகமும், அழகும் ஆனந்தமும், நேர்த்தியும் நிம்மதியும் ததும்பிக்கிடக்கும் உலகிலே, வறுமையும் வாட்டமும், சூழ்ந்துள்ள படுகுழியிலே வீழ்ந்துகிடக்கும் பாமரர்களைப் பற்றிய நினைப்புப் பார்வதிக்கு அடிக்கடி வருவதுண்டு. இந்த நினைப்பு வளரவளர அவளுக்குச் சிங்காரமாளிகைகளைக்காண்பதைவிடச், சிறுகுடிசைகளைக் காணவேண்டும், என்ற எண்ணம் வளர்ந்தது. அந்தக்குடிசைகளையும் அங்கே கூன் கொண்ட வாழ்க்கையைக்கொண்டுள்ளவர்களையுங்காணக்காண, உலகம் மிகமிகச் சீர்கேடாக இருக்கிறதுஎன்ற கோபமும், இந்தக்கேட்டைக்களைய ஏதாவதுசெய்தாகவேண்டும் என்ற துடிப்பும் அதிகரித்தது. எனவேதான், பார்த்திபனின்பதட்டத்தால் உள்ளம் வேதனை அடைந்திருந்த அந்த நேரத்திலும், திக்கற்றோர் திருச்சபையிலே பேசவேண்டுமென்று அதன் செயலாளர் வந்தழைத்ததும், பார்வதி அங்குசெல்ல இசைந்தாள். அந்தச்சமயத்திலே ஜெபாவைக்காணவேண்டுமென்ற ஏற்பாடு, குமார்விஷயமாகக் கொண்டிருந்த கவலை, முதலிய எதுவும் அவளுக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. இன்பமயமான இவ்வுலகிலே துன்பத்தின்பிரதிநிதிகளாகவாழும் அந்தத் தோழர்களைக் காணவேண்டும், அவர்களுக்கு விடுதலை உணர்வை ஊட்டவேண்டும், வாழ்க்கையின் கோட்பாடுகளை அவர்களுக்கு எடுத்துரைக்கவேண்டும், அவர்களைக்கண்டு பேசியபிறகு, அவர்களின் நிலையைப்பற்றி நிம்மதியாக வாழுபவர்களிடம் எடுத்துக்கூறவேண்டும் என்ற இந்த எண்ணங்கள், பார்வதியை, லேடிடாக்டரின் வீட்டைவிட்டுவேகவேகமாக வெளியே இழுத்துச்சென்றன ஊரின் கடைசிப்பாகத்துக்கு, வண்டிஇழுப்பவர்களும், வயற்காட்டாள்களும், குடியிருக்கும் பகுதி. குப்பைமேடுகளும், இடையிடையே கூரைவீடுகளும் இருந்தஇடம். குடியர்களும் வெறியர்களும் கூவிக் கொண்டிருந்தனர் அங்கு, பறைஒலி ஒரு பக்கம், பாய்ந்து கடிக்கவரும் நாய்களின் குலைப்பு மற்றோர்பக்கம், போதைகிளப்பும் கீதம் வேறோர்பக்கம், கட்டை கொண்டு மனைவியை அடிக்கும் கணவனும், கள்ளக்காதலனுடன் கொல்லைச் சுவரேறிக் குதிக்கும் கள்ளியும், தகப்பனுக்கு அடங்காத் தறுதலைகளும், தாயை உதைக்கும் தருக்கரும், அங்கு தர்பார் நடத்தினர்.

"டேய்! இது யாருபாருடா"

"ஒய்யாரக் குட்டிடா, ஓடிவந்த பட்டிடா"

"குலுக்கி நடக்கிறா, கும்மாளம் போடுறா"

இவையும் இவைகளைவிட ஆபாசமான "வரவேற்புரைகளும்" பார்வதிக்கு வழங்கப்பட்டன. திக்கற்றோர் திருச்சபையை நாடிச்செல்லும் வழியிலே, நடைபெறும் இந்தச்சம்பவங்களைக் கண்டு சலித்துக் கொள்ள வேண்டாமென்று செயலாளர் பார்வதியை வேண்டிக் கொண்டார். பார்வதி, "எனக்கு என்ன சலிப்பு! அவர்களின் நிலை அப்படி இருக்கிறது. குற்றம் அவர்களுடையதல்ல, என்று கூறினாள். இதற்குள் ஒருசிறுகும்பல் கூடிவிட்டது. "டே! நம்மை எல்லாம் கிருஸ்தவராக்க இந்தப்பொம்பளையும் அந்த ஆம்பளையும் வாராங்க, அவர்களைச் சும்மாவிடக்கூடாதுடா" என்று எவனோ ஒருவன் குண்டு வீசினான், அது வெடித்துவிட்டது. பலருக்கும் ஆத்திரம் பொங்கலாயிற்று. "நம்ம காளி, சாமுண்டி, சடையாண்டி, முதலிய குலதெய்வங்களைக் குறை கூற எவளோ வந்திருக்கா, அவ, இங்கே பேசக் கூடாது, கூட்டம்போட்டா, கழுதையைத்தூத்துங்க, நாய்களை ஏவுங்க, மலைப்பிஞ்சிகளை வீசுங்க' என்று வெளிப்படையாகவே ஒருவன் தூண்டத் தொடங்கினான். பார்வதி, திக்கற்றோர் திருச்சபையின் செயலாளரைப்பார்த்து, "இவர்கள் நாம், கிருஸ்தவ மதப்பிரசாரம் செய்யப்போவதாக எண்ணிக்கொண்டு ஏசுகிறார்கள். பாவம்! வேறே எந்த ஆஸ்தியும் இல்லாவிட்டாலும் இவர்களுக்கு இந்த மதப்பைத்யமாவது இருக்கிறதே" என்று கூறிவிட்டு, "உங்கள் திருச்சபை இருப்பது இவர்களுக்குத் தெரியாதா?" என்று கேட்டாள். "தெரியாது! அது கிடக்குமிடம் இன்னும் ஒரு இரண்டுமைல் போக வேண்டும்" என்றான். "அப்படியானால், அது அடுத்த கிராமத்திலே என்று சொல்லுங்கள்" என்றாள் பார்வதி. ஆமாம்! அரைமணி நேரத்திலே போய்விடலாம். ஏன்? ஆயாசமாக இருந்தால், இங்கே கொஞ்சநேரம் தங்கலாம், சிரமபரிகாரம் செய்துகொண்டு புறப்படுவோம்" என்று செயலாளர் கூறினான். அவனுடைய வாஞ்சனையைக்கண்டுமகிழ்ந்த பார்வதி, "அப்படி ஒன்றும் சிரமமில்லை, திருச்சபைக்கே போய்விடலாம்" என்று கூறினாள், இருவரும் சற்றுவேகமாக நடந்தனர்.

ஊருக்கு வெளியே, ஒரு வெளி. அங்கோர் கட்டிடம். நெல் அரைக்கும் இடம். அங்குதான் திக்கற்றோர் திருச்சபையின் விசேஷக்கூட்டம் ஏற்பாடாகி இருப்பதாகச் செயலாளர் கூறினார். அந்த இடத்தருகே வருவதற்குள், பார்

(7ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு.

காஞ்சி 10—9—44 ஞாயிறு


## வீரர் வேண்டும்.

சுயமரியாதைக் கோட்பாடுகளை, ஜஸ்டிஸ் கட்சியிலே புகுத்திவிடுகிறார்களே! அரசியலிலே மதத்தைக் கலந்துவிடுகிறார்களே! அரசியல் கட்சியிலே, பலமதத்தினர், பல ஜாதியினர், பல வைதிகர்கள், இருப்பார்கள், அனைவருக்கும் அரசியல் கட்சிபொதுவாகஇருக்கவேண்டுமேயல்லாமல், மதவிஷயத்திலே குறுக்கிட்டுப்பலரைக் கட்சியைவிட்டு விலகும்படி செய்யலாமா, கட்சிபலவீனமடைந்துவிடாதா?, காரியம் கெட்டுவிடாதா. என்று சிலர் கசிந்துருகுகின்றனர். இந்தப் போக்கினரிலே பலர், எதையோ எண்ணிக்கொண்டு வேறு எதையோ பேசுகிறார்கள்; பட்டம்பதவியை எண்ணிக்கொண்டு, அதனைவெளியே எடுத்துப்பேசினால் வெட்கக்கேடாக இருக்குமே என்று அஞ்சி, கட்சியிலே தமக்கு இருக்கும் அளவிடமுடியாத அன்புப் பெருக்கினாலேயே அரசியலும் மதமும் வேறுவேறாகஇருக்கவேண்டுமென்றுகூறுவதாகப் பேசுகின்றனர். இந்தப்போக்கு கொண்டோரிலே, ஒருசிலர் உண்மையாகவே, அரசியல் கட்சியிலே மதப்பிரச்னையைக் கலக்கலாமா என்பதிலே சந்தேகமும் அதன்பயனாகச்சஞ்சலமும்கொண்டுள்ளனர். அந்தச் சிறுதொகையினரின் உண்மையான உள்ளக்கிளர்ச்சியை நாம் மதிக்கக்கடமைப்பட்டிருக்கிறோம்,அவர்களின் உள்ளன்பை நாம்சந்தேகிக்கவில்லை. ஆனால் அவர்கள், தம்மையும் அறியாமல் அரசியலை இலாபச்சூதாட்டமாகக்கொண்டுள்ளவர்களின் வஞ்சகவலையிலே,வீழ்ந்துவிடுவதுகண்டு வருந்துகிறோம்.

நமது குறிக்கோள், சகலரும் சமுதாயத்திலே சமஉரிமையோடு வாழவேண்டும், பார்ப்பன ஆதிக்கம்தொலையவேண்டும், என்பதுதானே, இந்தப் பெருநோக்கம் ஈடேறப்பணிபுரிவோம், இந்தப்பிரச்னையிலே வேறுபலவற்றைக்கொட்டிக் குழப்பவேண்டாம், என்றுகூறுகின்றனர். கண்ணியர்கள் இதனைக்கூறும்போது, வீணாக அவர்கள் விசாரப்படுகிறார்களே என்றுநாம்பச்சாதாபப்படுகிறோம். கயவர்கள் இதனைக்கூறும்போது, என் சொல்வோம்! ஒழுக்கம், நாணயம் அன்பு அறிவு, சமரசம் சற்குணம், முதலியவற்றைப்பற்றி ஒருதுளியும் கவலைப்படாமல் வாழ்க்கையிலே இன்பத்தை எப்படியேனும் பெறவேண்டும், எத்தனைபேர் பிணமானாலும் கவலைஇல்லை, பணம்குவிந்தால் போதும், எவ்வளவு ஒழுக்கக்கேடுகள் கூத்தாடினாலும் அக்கறை இல்லை, ஒய்யாரமானவாழ்வு கிடைத்தால் போதும், என்றுகருதி, அரசியலை வாழ்க்கைக்குச் சுவைதரும் விபசாரமார்க்கமாக்கும் போக்கினர், அரசியலிலே மதத்தைப் புகுத்திவிடுகின்றனரேஎன்றுகூறிஆயாசப்படுவதாக நடிப்பது, நகைப்புக்கு இடமட்டுமல்ல, பொதுமக்களை எவ்வளவு சுலபமாக ஏய்த்துவிடமுடியும் என்று அவர்கள் கருதுகிறார்கள் என்பது விளங்கும்போது, இச்செயல், சீரியோருக்குச் சீற்றத்தை மூட்டாதிருக்கவும் முடியாது!

அரசியலைப்பற்றியும் அவர்கட்கு அக்கறைகிடையாது, மதத்தைப்பற்றியோ அவர்களுக்கு மாசும்தூசும் தவிர மற்றது தெரியாது. இரண்டிலும் அவர்கள் கொண்டிருப்பது, கூளத்தைப் பதரை, மணியையல்ல! உயரப்பறந்துகொண்டே கீழேகிடக்கும் பொருளைக் கண்டுபிடிக்கும் தொலைநோக்கித் திறமமைந்த கூரிய கண்படைத்த கருடனுக்குப் பார்வைபடுவது, செத்த எலி, புழுத்த நண்டு, நெளியும்புழு இவற்றின்மீதுதானேதவிர, மதுரமான கனி, சுவையான பண்டம், இவற்றின்மீதல்ல. அதுபோலவே, அறிவுத்திறனை அளவின்றிப்பெற்றுவிட்டதாகக் கருதிக்கொண்டுள்ள இவர்களின் பார்வை அரசியலிலே, எதன்மீதுபடுகிறது? அரியாசனத்தின்மீதா? ஆண்மையாளருக்கேற்ற அணிவகுப்பின்மீதா?, இல்லையே! பயனற்ற, பரங்கியின் பக்கநின்று பராக்குக்கூறும் பதவிமீது, அவன் அகில உலகுக்கும் தனதுவிசுவாசமுள்ள அடிமை என்பதை உணர்த்துவிப்பதற்குத்தந்து வரும் பட்டம், " கமிட்டியிலே ஒரு இடம், ஆகிய இத்தகைய மிகமிகச் சில்லறைகள் மீதுதான் இவர்களுக்கு நோக்கம்!

இயல்புக்கு ஏற்ற எண்ணம்! பஞ்சத்தால் அடிபட்டுக் கிடந்தவனுக்குப் பழங்கஞ்சி கிடைத்தாலும் அதுவே பாலும் தேனுமாக இருப்பதுபோலப்பதவிப்பசி பிடித்தலையும் சிலருக்கு, இந்தப்போலி மதிப்புமட்டுமே உள்ள, சில்லறை அதிகாரங்கள் கிடைத்துவிட்டாலே போதும், சித்தம் குளிர்ந்துவிடும், சத்தம் அடங்கிவிடும். பாரரிக்கூட்டத்துக்குப் பட்டாடை ஏது? கந்தலே கிடைக்கும்; அதிலே ஒரு கந்தல் அழகாக இருந்தால் ஆனந்தம் அதிகமாகும்! மாட்டுக் கழுத்திலே கட்டப்படும் மணி, அந்தமாதருக்கு அணியாகிவிடும்! அதுபோல மிகமிகச்சாமான்யமான சில்லறை அதிகாரங்களைப்பெறுவதும், சிரித்துப் பேசக் கற்றுக்கொள்வதும், சீமான்களின்தோழமையைப்பெறுவதும், சிலாக்கியமான காரியம், அதுவே அரசியல்மூலம் அடையவேண்டியபேறு என்று எண்ணுகின்றனர் சிலர். நரிக்குக் கிடைப்பது அரிமாவுக்குக் கிடைத்தால் அரிமா அகங்குளிருமா? அதுபோலத்தான், தன்னலத்துக்காக ஏதோ ஒரு தகரக்குவளைபோன்றஅதிகாரம் கிடைத்தால்போதும் என்று திருப்தி அடையச் சிலர் தயாரில் இருக்கலாம். தமிழன், தமிழ்ப்பண்பை இழவாதவன், வீரன், உண்மைத்தொண்டன், விடுதலைவிரும்புவோன், இவைதமைத்துச்சமெனக்கூறிடுவான், தூ தூ என்று ஏசிடுவான், அவன் விரும்பமாட்டான், காகிதப்பூஞ்சோலையை, கலர்க்கண்ணாடியாலான நகையைக், கனியாத பலாவை!

அரசியலின் மூலம், நாம்வேண்டுவது, சில்லறைப்பதவிகளை அல்ல, சிங்காரவாழ்வையல்ல. நமது இனத்தின் விடுதலையைநாம் விரும்புகிறோம். அதற்கே அரசியலை நாம் துணைகொள்கிறோம். அதன் பொருட்டே அரசியலிலே பணியாற்றுகிறோம். எந்தத்திராவிட இனம்இந்தமானிலம் முழுதாண்டிருந்தார் இணையின்றி வாழ்ந்தார் தமிழ்நாட்டு வேந்தர், என்று நமது புரட்சிக்கவிபூரிப்போடு கூறினரோ அந்த வேந்தர்கள் வீழ்ந்தபிறகு அரசு இழந்து ஆண்மை குறைந்து, அறிவுகுழம்பிக்கிடக்கிறதோ அந்த இனத்தை மீண்டும் அரியாசனத்திருத்தி, ஆண்மைக்கும் அறிவுக்கும் உரிய உயரிய இடமளித்து, தக்கதோர் நிலையை உண்டாக்கவேண்டும் என்பதே, அரசியலின் குறிக்கோளன்றி, அனந்தாச்சாரியாருக்குக் கிடைக்கக்கூடிய சட்டசபை ஸ்தானத்தை, அடிவயிறு புண்படத் தேர்தல் பிரசாரம் செய்து, அடி உதைபட்டு, அறிவீனர்களின் ஏசலையும் பெற்றுக்கொண்டு, ஒரு ஆறுமுகப்பிள்ளைக்குக் கிடைக்கும்படி செய்வது அல்ல! சேலம் இதனைத்தான் தெளிவாக்கி இருக்கிறது. இது தமிழகத்திலே தம்மையே தமிழரின் பணிக்காக அர்ப்பணம் செய்துவிட்ட, அழைப்பு கிடைத்ததும் தாலமுத்துக்களாகத் தயாராக இருக்கும், தன்னலமற்ற, தளராத பற்றுக்கொண்ட, தமிழ் இளைஞர்களின் இருதயகீதம்!

அனந்தாச்சாரியாரும் இராமபக்தர் ஆறுமுகப்பிள்ளையும் அப்படித்தான். முன்னவரும் வர்ணாஸ்ரமி, பின்னவரும் அவ்விதமே. ஆச்சாரியாரும் அவன் அருளையே வேண்டுவோர், பிள்ளைக்கும் அதுவே நினைப்பு. இருவருக்கும், இந்தச் சமுதாய அமைப்பிலே அவ்வளவு அக்கறைகிடையாது, என்ற நிலைஇருக்குமானால், அனந்தாச்சாரிக்குக்கிடைக்கும் இடம், ஆறுமுகம்பிள்ளைக்குக்கிடைக்கச் செய்வதால், யாதுபலன்? என் அதற்காக ஒரு கூட்டம் வேதனையை அனுபவித்துக்கொண்டு, வீணருடன் மோதிக்கொண்டு, விதியற்றவர் கதியற்றவர் என்று மதியற்றவரால் தூற்றப்பட்டு, உழைக்கவேண்டும் என்று கேட்கிறோம். எத்தனை ஆயிரம் வாலிபர்களின் உள்ளம் ஒடிந்திருக்கிறது, இந்த நிலைமையைக்கண்டு! அவர்களை இந்த பித்தலாட்டப் பலிபீடத்திலே இன்னமும் எத்தனை காலத்துக்கு இருக்கவேண்டும். விழலுக்கு நீர் இறைப்பானேன், விலாநோகுதே என்று விம்முவானேன்! அலிஎன்று தெரியாமல் அணைப்பானேன், ஐயோ சனியனே என்று ஆயாசப்படுவானேன்! கட்டையாலே கத்தியும் அட்டையாலே கேடயமும்செய்து பிடித்துக்கொண்

டால், எதிரிக்குச்சிரிப்புவருமா, சிந்தனை குழம்புமா? ஆள்மாற்றமே அரசியல் காரியம் என்று எண்ணுபவரைக் கேட்கிறோம், அடிமைப்பட்டுக்கிடக்கும் ஒரு இனத்தைமீட்கும் காரியத்துக்கு யார் தேவை? எந்த ஆரியத்தால் இனம் அடிமைப்பட்டுக்கிடக்கிறதோ அந்த ஆரியத்தை அழித்தொழிக்கும் ஆண்மையாளரா, அன்றி அதே ஆரியத்துக்கு ஆலவட்டம் சுழற்றும் அடிமைகளா? பிரன்சு நாட்டிலே புரட்சியின்போது, ரஷியநாட்டிலே புரட்சியின்போது, எது அரசியிலாகக்கருதப்பட்டதோ, அத்தகைய நிலைமையிலே திராவிடம் இருக்கிறது. அரசியிலும் மதமும் கலப்பதா என்பதல்ல கேள்வி, மதத்தால் நம்மை அரசியலிலே அடிமைப்படுத்தியிருக்கும் இழிநிலையைப் போக்கிக்கொள்ள, ஆரியர் புகுத்தியிருக்கும் மதத்தை ஒழித்தாக வேண்டாமா என்பதே கேள்வி. விழி சரியாக இருந்தாலன்றோ வழி தெரிந்து நடக்கமுடியும்? எதிரியின் வஞ்சகவலையாகிய ஆரிய மார்க்கத்தை அறவே நீக்கா முன்னம், நமக்குஅரசியல் வாழ்வு எங்ஙனம் சிறப்பாக இருக்க முடியும்!

**எனவேதான் சேலத்தில், வீரர்கள் தேவை! காரியமாற்றும்தீரர்கள் தேவை! அஞ்சாநெஞ்சமும் ஆரியத்திடம் அடிமைப்படாத உரமும்கொண்ட உழைப்பாளிகள் தேவை! விடுதலைப்போருக்கு வீரர்கள் தேவை! பேரம்பேசும் தம்பல் வேண்டாம்! பேதைமையை அணிகலனாகக்கொண்ட கூட்டம் வேண்டாம்! திராவிடர் தேவை! என்று தீர்மானித்துவிட்டனர். தீரர்களே! திரண்டு வாருங்கள்! மற்றவர் ஒதுங்கி நில்லுங்கள்!!**

மாநாடு எவ்வித ஒருசிறு அபிப்பிராய பேதமோ மேற்கண்டதைத்தவிர ஒரு சிறு எதிர்ப்போ இல்லாமல் நடைபெற்றது. தீர்மானங்கள்யாவும் ஏகமனதாய் நிறைவேறின. இதற்குப் பத்திரிகை நிருபர்களும், சர்க்கார் C. I. D. சுருக்கெழுத்தாளர்கள் ரிகார்டுகளும், அதிகாரிகளும் காட்சியாளர்களும் பிரதிநிதிகளும் சாட்சியாகும்.

**ஈ. வெ. இராமசாமி.**

---

# சேலம் மாநாடுபற்றிப் பெரியார் அறிக்கை.

சேலம் மாநாட்டைப்பற்றி ஒரு சிலர் தாறுமாறான அறிக்கைகளைப் பத்திரிகைகளுக்கு அனுப்பிவருகிறார்கள்.

அவைகள் ஒன்றும் நேர்மையானவை அல்ல. பெரும்பாலான விஷயங்கள்உண்மையுமல்ல. எனக்கு ஒன்றும் அனுப்பப்படவுமில்லை.

மாநாட்டில் ஜஸ்டிஸ்கட்சிக்குத் தென் இந்திய நலஉரிமைக்கழகம் என்றுஇருந்த பெயரை திராவிடர் கழகம் என்று மாற்றப்பட்டது உண்மைதான், ஆனால் அத்தீர்மானம் பொதுக்கூட்டத்தில் பிரரேபித்து ஆமோதித்தவுடன் இதற்குப் "போதிய நோட்டீஸ் இல்லை" என்று மாத்திரம் தோழர்நெட்டோ சொன்னார். அதைத்தோழர் கணேசசங்கரன் ஆதரித்தார். தலைவர்அதற்குச்சமாதானம்சொன்னார். அதாவது,

"சேலத்தில், 26—11—43ம் தேதியில் நடந்த S. I. L. F. நிர்வாகசபைக் கூட்டத்தில் பெயர்மாற்றம் நிறைவேற்றப்பட்டு அதைச் சேலத்தில் நடக்கும் மாகாண (இந்த) மாநாட்டுக்குச் சிபார்சு செய்வதாகவும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதில் தோழர்கள் நெட்டோ, இரத்தினம் பிள்ளை முதலியவர்களும், இருந்திருக்கிறார்கள், அதன்பின் சுமார் 20க்கு மேற்பட்ட ஜில்லா, தாலுக்கா மாநாடுகளில் இதுநிறைவேற்றப்பட்டுச் சேலம் மாநாட்டுக்குச் சிபார்சுசெய்யப்பட்டுதெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தமாநாட்டிற்கும் இதுபற்றி வெளியூர்களில் இருந்து ஏராளமான தீர்மானங்கள் வந்திருக்கின்றன. அவைதோழர் நெட்டோ அவர்கள்வசமே இன்னமும் இருக்கின்றன.

அன்றியும் தென்னிந்தியர் கழகம் என்பதும் திராவிடர் கழகம் என்பதும் ஆதியில் ஏற்படுத்தினவர்கள் கருத்தில் வித்தியாச அர்த்தம் கொண்டதல்ல. மக்களுக்கு இனஎழுச்சியும், நாட்டு எழுச்சியும், ஏற்படுவதற்கும் திராவிடநாடு கேட்பதற்கும் ஆக்கம் அளிப்பதற்கும் ஆகவே இச்சிறு மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்.

பிரதிநிதிகள் "ஓட்டு, ஓட்டு" என்றார்கள். ஓட்டுக்கு விடப்பட்டது; ஏகமனதாய் நிறைவேறிற்று. அப்போது தோழர் நெட்டோ அவர்களும் மற்றும் இப்போது அறிக்கைவிடும் நண்பர்களும் இருந்தார்கள். எதிர்ப்புக்கு நெட்டோவாவது இதர நண்பர்களாவது கைதூக்கியோ ஆட்சேபனையைக் காட்டியோ ஓட்டுக்கொடுக்கவில்லை. வேறு ஒருவரும் எதிர்ப்புக்கு ஓட்டுக்கொடுக்கவில்லை. இதுதான் பெயர்மாற்றத் தீர்மானத்தினுடையவும், அதன் எதிர்ப்பினுடையவும் நடவடிக்கையாகும். நெட்டோ முதலியவர்களால் பத்திரிகைகளுக்கு வந்தசேதிகள் பின்னர் யோசித்துச் சொல்லப்படுபவைகளாகும்.

மாநாடு வெற்றியாக முடிந்து தலைவர் முடிவுரை ஆனவுடன் ராவ்சாகிப் துரைசாமிப்பிள்ளை அவர்கள் வரவேற்புக்கழகச் சார்பில் தீர்மானங்களைப் புகழ்ந்துகூறி, தலைவருக்கும், தோழர் பாண்டியனுக்கும். வரவேற்புக் கழகத்தலைவர், காரியதரிசி, ஆகியவர்களுக்கும் பிரதிநிதிகளுக்கும், மாநாட்டுக்குக் கொட்டகை உதவியமுனிசிபாலிடியாருக்கும் மற்றவர்களுக்கும் பெருத்த கைதட்டலிடையே நன்றிகூறினார்கள்.

---

# பார்வதி பி. ஏ;

5-ம் பக்கத்தொடர்ச்சி

வதி, அங்கு பல திக்கற்றோர் கூடியிருப்பார்கள் அவர்கள் விஷயத்திலே அக்கறைகொண்டவர்கள் வந்திருப்பார்கள், சொற்பொழிவாளர்கள் வேறு பலர் வந்திருக்கக்கூடும் என்றெல்லாம் எண்ணிக்கொண்டாள். ஆனால் செயலாளர் குறிப்பிட்ட இடத்தருகே வர வரப் பார்வதிக்கு, ஒரு கூட்டம் நடைபெறுவதற்குரிய அறிகுறி எதுவும் தென்படாதது ஆச்சரியத்தை முதலிலும், பிறகு சந்தேகத்தையும் தந்தது, கூட்டம், எப்போது ஆரம்பமாகும்?" என்று கேட்டாள். "நாம் போன உடனே!" என்று தயக்கமின்றிச்செயலாளர் பதிலுரைத்தார், மேலும் கேள்விகளைக்கிளப்பித் தனது பயங்காளித்தனத்தைக் காட்டிக்கொள்ளக்கூடாது என்று பார்வதி கருதினாள். அந்த இடத்துக்கும் வந்தனர். இவர்களை வரவேற்க ஆட்கள் காணோம். திக்கற்றோர் சபையிலே ஆடம்பர வரவேற்பு இருக்கமுடியாது. பாவம் ஏழைகள்தானே என்று மனதைச் சமாதனப்படுத்திக் கொண்டாள். கட்டடவாயிலிலே வந்ததும், பார்வதி திடுக்கிட்டுப்போனாள். உள்ளே நாலைந்துபேரே இருந்தனர், அவர்களும், பிரசங்கம் கேட்கக்கூடியவர்களாகத் தெரியவில்லை, கையில் கம்பும் அரிவாளும் வைத்துக்கொண்டிருந்தனர்! பயம் திடீரென்று அதிகரித்தது ஜுரவேகத்தில், முகம் வெளுத்துவிட்டது, செயலாளரைப்பார்த்தாள். அவன் குறும்புத்தனமாகச் சிரித்துக்கொண்டே "என் கிலி! புலியா உள்ளே! இல்லை, உள்ளே போவோமே" என்று கூறினான். "கிலியா! இல்லையே," என்று தைரிய பாவனையுடன் பார்வதி பேசினாள்.

"குமாரின் காதலி கிலி கொள்வாளா? கோபாலா! கழுத்தைப்பிடித்து உள்ளே தள்ளு அந்தக்கள்ளியை!" என்று பார்த்திபன் உள்ளே இருந்து உரத்தகுரலிலே கூவினான், "ஐயோ!" என்று பார்வதி அலறினாள். (தொடரும்)

# விடுதலை வீரர்கள்.

★

வெற்றிக்கொடிபிடித்து வீரரஷ்யர்கள் நாஜியை நசுக்க ஆரம்பித்தனர். இன்று அந்தச் சோர்விலாச்சோவியத் படை, ரஷ்யாவிலிருந்துஜெர்மானியரைவிரட்டியடித்துக்கொண்டு, ருமேனியா, பல்கேரியா ஆகிய மண்டலங்களிலே வந்துவிட்டது. இதேநேரத்திலே, இத்தாலியிலே நேசப்படைகள் முன்னேறி விட்டன பிரான்சின்விடுதலை பூர்த்தியாகிவிட்டது அம்மட்டோ!

ஜெர்மனியிலேயே நேசப்படைகள் நுழைந்துவிட்டன.

அந்த நேசப்படையின் தலைவர்களின் வரலாற்றுக்குறிப்பு கீழேதரப்பட்டிருக்கிறது; இந்தவிடுதலை வீரர்களின் விஷயம் உலகுக்கு விருந்தல்லவா!!]

★

கூட்டு விடுதலைப் படைகளின் பிரதம தளபதியான ஜெனரல் ட்வைட் ஐசனோவர் ஒருபுறமும் நேசநாட்டுப் பிரஜைகளுக்காக மற்றொருபுறம் போர்புரியும் லட்சக்கணக்கான வீரர்களுக்கும் ஜவாப்தாரியாயிருப்பவர். அவருடைய முடிவுகளும் அவருடைய உத்தரவுகளும் ஹிட்லருக்கு முடிவுதேடிவிடக்கூடும். ஆனால்அவருக்கு அபார நம்பிக்கை இருக்கிறது. மிகமிக விவரமாய்த் திட்டம் போட்டுஅப்புறம் யமனே தாக்குவதுபோல் தாக்கவேண்டுமென்பதுதான் அவருடைய சித்தாந்தம். அத்துடன், பிரிட்டனையும்அமெரிக்காவையும் சேர்ந்த பெரிய ராணுவ மேதாவிகள் சிலர் அவரைச் சூழ்ந்து கொண்டே இருக்கிறார்கள்.

## ஸர் ஆர்தர் டபிள்யூ, டெட்டர்.

ஜெனரல் ஐஸனோவருக்குக்கீழ் டெப்யுடி பிரதம தளபதியாயுள்ள டெட்டர், நேச ஏற்பாட்டில் இதுவரை ஆர். ஏ. எப். ஆசாமி ஒருவரும் வகிக்காத அவ்வளவு உயர்ந்த பதவி வகிப்பவர். ஸ்காட்லாண்டில் பெரிய குடும்பத்தில் பிறந்த இவர் கேம்ப்ரிட்ஜில் பட்டம் பெற்று சிறிதுகாலம் ரக்பி பந்தாட்டத்தைத் தொழிலாகக்கொண்டிருந்து, 1916-ல் ராயல் பறக்கும் படையில் சேர்ந்தார். முதல் உலகமகாயுத்தத்தின்போதுபிரான்சிலும் எகிப்திலும் சேவைசெய்தபின் மன்னர்விமானப்படைக்குமாற்றப்பட்டுத் துரிதமாய் பதவியில் உயர்ந்தார். இன்று அவருக்குள்ள விமான பிரதம மார்ஷல் அந்தஸ்து மிகச் சிலருக்கே இருக்கிறது.

1941-ல் க்ரீட் தோல்விக்குப் பிறகு, மத்தியதரைக் கடலிலேயே பிரிட்டனின் நிலைமைக்கு ஆபத்துவந்துவிட்டதென்று தோன்றிய சமயத்தில், டெட்டர் மத்தியக் கீழ்த்திசையில் R. A. F. தலைவராக நியமிக்கப்பட்டார். சில மாதங்களில்அவர் கிழக்குமத்தியதரைக்கடல் வானமே R. A. F.ன் சொந்தச்சொத்தாகும் படி செய்துவிட்டார். அப்புறம் ஒருவருஷங் கழித்து, ரோம்மல்மீதுஎட்டாவது சைன்யம்பெற்ற பிரமாத வெற்றிக்கு உதவியாய் விமான ஆதரவளித்தவர் இவர் தான். சென்றவருஷம், தரைநடவடிக்கையையும் வானநடவடிக்கையையும் இணைத்து, ஜெர்மன் விமானப்படை நேசமுன்னேற்றத்துக்குக் குறுக்கிடாதபடி தடுத்துவிட்டார்.

விமானத்துறை டெட்டருக்குப் பிரசித்தியை மட்டுமன்றித் துயரத்தையுங் கொடுத்திருக்கிறது. இங்கிலாந்தில் ஹிட்லரின் விமானங்களை எதிர்த்துப் போராடுகையில் அவரது மூத்தமகன் உயிர்துறந்தார். சென்ற வருஷம் அவர்மனைவியார் விமானவிபத்தில் இறந்தார். ஆனால் அவர் அவ்வளவையும் விழுங்கிவிட்டுக் கருமத்தில் கண்ணுயிருந்துவருகிறார்.

## ஸர் பெர்ட்ராம் ஹெக்ராம்ஸே.

1940 மே மாதத்தில் ஹிட்லரின் டாங்கிப்படைகள் பிரிட்டிஷ் உதவிப்படை அவ்வளவையும் டன்கர்க்கில் சுற்றிவளைத்துக்கொண்டபோது, அழிவா, சரணதியா என்ற நிலைமையில், திடீரென்று பெயர்தெரியாத ஒரு கடற்படைப்பிரிவு இங்கிலாந்திலிருந்து புறப்பட்டு ஆங்கிலக் கால்வாயைத் துரிதமாய்க்கடந்து சென்றது. சில நாட்களுக்குள் 3,35,000 பேர் யமன் வாயிலிருந்து மீட்கப்பட்டனர். இரண்டு வருஷத்துக்கு முன்பே ஓய்வு பெற்று, மீண்டும் அழைக்கப்பட்ட இந்த வழுக்கைத் தலை ஆசாமிதான் இதற்கு முக்கிய காரணஸ்தர். டன்கர்க் மீட்சி அவருக்கு "டைனமோ" என்ற பெயரைத் தேடிக்கொடுத்துவிட்டது. டன்கர்க்கில் மீட்டதைவிடப் பல மடங்கு பெரிதான ஒருபடையைமீண்டும் நாஜியரோடு போர்புரிவதாகற்காக மேற்கு ஐரோப்பாவுக்குக் கொண்டுபோகும் வேலையையும் இந்தவைஸ்அட்மிரலே செய்ய வேண்டியதாயிற்று.

1898 இவர் கடற்படையில் சேர்ந்தபோது இவருக்கு வயது 14. 40 வருஷ சேவைசெய்துவிட்டே இவர் ஓய்வெடுத்துக்கொண்டார். 1942ல் வடக்காப்பிரிக்கப் படையிறக்கத்துக்கு ஒரு திட்டம் வகுக்கப்பட்டபோதும், 1943ல் ஸிஸிலிய, இத்தாலிய, படையெடுப்பு நடந்தபோதும், அவற்றில், இவர்பெரும் பங்கெடுத்துக்கொண்டார்.

## ஸர் ட்ராபர்ட் எல்லே—மால்லரி.

முப்பது வருஷத்துக்கு முன்னே, சட்டப்படிப்பைவிட்டுவிட்டுஅப்போதுதான் தோன்றியிருந்த பிரிட்டிஷ் விமானப் படையில்சேர்ந்த இவர் எதையும் ஆய்ந்தோய்ந்து செய்வதற்குப் பெயர் பெற்றவர். 1942 கோடையில் டீயெப்பிமீது நடந்த தாக்குதல் முற்றிலும் வெற்றிகரமாய் முடியவில்லையென்றாலும், லேமால்லரியின் சண்டை விமானிகள், எதிர்த்து வந்த ஜெர்மன் விமானக்கூட்டங்களைத் திறமையுடன் சமாளித்தார்கள். மெது மெதுவாய்த்தான் இவர் விமான பிரதம மார்ஷல் பதவிக்கு உயர்ந்தார். துணிவும் தீரமும் இவருடைய இரத்தத்திலே ஊறியவை. இவருடைய சகோதரர் சில வருஷங்களுக்கு முன்னே எவரெஸ்ட் சிகரத்தின்மீது ஏறும் முயற்சியில் உயிரைக்கொடுத்தார். 55-வயதில் ஹிட்லரின்பலத்தைச் சிதைப்பதற்காகப் பிரமாண்டமான வெடி விமானங்களையும் ஜெர்மன் விமானங்களை வானத்திலிருந்து துரத்துவதற்காகச் சண்டை விமானங்களையும் ஏவும் பெரியவேலையில் இவர் ஈடுபட்டிருக்கிறார்.

## ஸர் பெர்னட் எல். மான்ட்காமரி

போரையே தொழிலாய்க் கொண்ட மந்திரி குமாரரான "எல் அலாமீன் மாண்டீ" ஆப்பிரிக்காவிலேயே புகழ் பெற்றுவிட்டார். ஆனால் இன்னும் அவர் நோக்கம் நிறைவேறவில்லை, தலைவர்என்ற முறையிலே வீரரெல்லாம் இவருக்காக உயிரை விடுவார்கள். தன் ஹோதாவிலே மற்றவர்களுக்கு இவரைக் கண்டால் ஆகாது. எப்படியானாலும் சரி, போர் ஒன்றுக்காகத்தான் இவர் வாழ்கிறார். கடினமான துறவு மனப்பான்மை கொண்டவராதலால் கருமத்தில்தான் கண்: விருப்பு வெறுப்பு, சுகபோகம் எல்லாம் அப்புறம்தான். தம் வீரர்களும் அப்படியே இருக்க வேண்டுமென்றுதான் எதிர்பார்ப்பார். நிருபர்களெல்லாம்இவர் ஏதோ தற்பெருமைக்காரர் என்று கருதுகிறார்கள். குல்லாப்போட்டுக்கொள்வது கூட "மான்ட்காமரி" ட்ரேட்மார்க்கை ஏற்படுத்தத்தான் என்று கூறுகிறார்கள். ஆனால் இவருடைய வீரர்களுக்கு இவரிடம் அபார பிரியம். 56 வயது மான்ட்காமரி 21 வயதில் ராணுவத்தில் புகுந்தார். முதல் மகாயுத்தத்தில் டி. எஸ். ஓ. பெற்றார். நாஜி மின்னல் தாக்குதலுககு முன் பிரான்ஸில் ஒரு டிவிஷனை நடத்தினார்; டன்கர்க்கிலும் இருந்தார். அப்புறம் ஜெர்மன் படையெடுப்பைச்சமாளிப்பதற்கென்று தயாரான பிரிவுகளுக்கும் தலைவராயிருந்தார். இந்தச் சமயத்தில் தான் தமது வீரர்களும் உத்தியோகஸ்தர்களும் ஒவ்வொரு வாரமும் ஏழு மைல் ஓடவேண்டுமென்று வற்புறுத்தினார்.

சென்னை

## சுயமரியாதைச் சங்கம்.

30—7—44-ல் நடைபெற்ற 5-வது சுயமரியாதை மாநாடு, 31—7—44-ல் சுயமரியாதைச்சங்கநிதிக்கும், தாலமுத்து நடராசன் கட்டிடப் பூர்த்திக்காகவும் நடத்தப்பட்ட சந்திரோதயம்நாடகவரவு-செலவு விவரம்.

### மாநாடு.

| | |
|---|---|
| நன்கொடை, வரவேற்புக்கட்டணம் மொத்த வரவு ரூ. | 365–0–0 |
| மண்டபம், விளம்பரம், ஒலிபெருக்கி, ரயில் கட்டணம் ஆகிய மொத்தச்செலவு ரூ. | 300–2–0 |
| மாநாடு இருப்பு... | 64–14–0 |

### நாடகம்.

| | |
|---|---|
| டிக்கட்டு விற்பனை ரூ. | 2225–8–0 |
| நகைச்சுவை அரசு, N. S. கிருஷ்ணன் இசைச்செல்வர் M. K. தியாகராசபாகவதர் நன்கொடை ரூ. | 900–0–0 |
| சில்லரை நன்கொடைகள் | 16–9–3 |
| | 3142–1–3 |
| நாடகச் செலவு ரூ. | 1087–4–6 |
| நாடக இருப்பு ரூ. | 2054–12–9 |
| மாநாடு இருப்பு ரூ. | 64–14–3 |
| சங்கத்தின் மொத்த இருப்பு ரூ. | 2119–10–9 |

அச்சிட்ட முழுவிபரங்கள் எல்லோருக்கும் விரைவில் அனுப்பப்படும்.

N. V. நடராஜன்,
காரியதரிசி.

## உண்மை நாடுவோர் சங்கம்,
திருச்செங்கோடு.

2—9—44ல் திருச்செங்கோடு "உண்மை நாடுவோர் சங்க"ப்பொதுக்கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

27—8—44ல் சேலத்தில் முறைப்படி நடைபெற்ற 16வது "தென்னிந்திய நல உரிமைச் சங்க" மாநாட்டைப்பற்றியும் அதன் தலைவரைப்பற்றியும், அதில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப்பற்றியும், அதில் கலந்துகொண்டபல்லாயிரக்கணக்கான பிரதிநிதிகளைப்பற்றியும் சில பத்திரிகைகளில் தப்பும் தவறுமாக அறிக்கை விட்டிருப்பதைக் கண்டு அவர்களை இக்கூட்டம் பலமாகக் கண்டிப்பதோடுஅவர்கள்மீது தலைவர் பெரியார் அவர்கள் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் தலைவர் ஈ. வெ. ரா. பெரியார் அவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

## ஜனார்த்தனனுக்குப் பரிசு.

29—8—44 செவ்வாயன்று மாலை 4 மணிக்குச் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் "பிரின்சிபால் திருவேங்கடசாமி கப்" இன்டர்—காலேஜ் தமிழ்ச்சொற்றிறப்போட்டி நடைபெற்றது. தோழர் சேதுப்பிள்ளை, B. A; B. L; கோதண்டபாணிப்பிள்ளை B. A; ராவ்பகதூர் சம்பந்த முதலியார் ஆகியோர் நீதிபதிகளாகஇருந்தனர். உலகப்போர்ஒற்றுமை விளைவிக்குமா என்பதுபொருள். தோழர் A. P. ஜனார்த்தனம் B. A; அவர்கள் முதற்பரிசுபெற்று மேற்படி திருவேங்கடசாமி கப்பினைஅடைந்தார் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

பச்சையப்பன் கல்லூரித்
தமிழ்ச் சங்கத்தார்.


தந்தி:—"புறமார்க்" திருச்சி.





சேலம்,

## திராவிடர் கழகம்.

30—8—44 இரவு சுயமரியாதைச் சங்கத்தில் செவ்வாய்ப்பேட்டை திராவிடர் கழகத்தின் கமிட்டிக்கூட்டம் நடந்ததில் கீழ்க்கண்ட 2 தீர்மானங்கள் நிறைவேறின.

1. சென்னை மாகாண 16-வது ஜஸ்டிஸ் மாநாட்டில் சுமார் 20000 பேர்கள் சேர்ந்து ஏகமனதாகச்செய்த தீர்மானங்களைச் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்று அறிக்கைவிட்டிருக்கும் தோழர்களான சேர்மன் P. இரத்தினசாமிப்பிள்ளை, C. G. நெட்டோ, A. கணேசசங்கரன், P. பாலசுப்பிரமணியம்மற்றும் பலரின் போக்கைக் கண்டுவருந்துவதோடு வன்மையாகக் கண்டிக்கிறது.

2. சேலம்மாவட்டத்திராவிடர் கழகத்தில் தலைவராக உள்ள தோழர் A.கணேசசங்கரன் அவர்களும் மற்றும் உள்ள கமிட்டி அங்கத்தினர்களில் சிலரும் ஜஸ்டிஸ்கட்சிக்கு "திராவிடர் கழகம்" என்ற பெயரிடவேண்டும் என்று வந்த தீர்மானத்தை எதிர்த்ததோடு அறிக்கையும் விட்டிருப்பதால் ஷையார்களை சேலம் மாவட்டத் திராவிடர்கழகத்திலிருந்து நீக்கவேண்டுமாய் ஷை கழகத்தாரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

### மறைவு

பிரபல நிலச்சுவான்தாரும் பொதுநல உழைப்பாளியுமான பட்டிவீரன் பட்டி ஆ. மூக்கநாடார் தமது இல்லத்தில் 82-வது வயதில் 27—8—44 மாலை இயற்கை எய்தினார் ஷையார் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


## பெரியார் தினத்தில்!

பெரியார்செய்த தொண்டுகளை உணரவும், பிறர்க்கு உணர்த்தவும் வேண்டாமா? அப்படியானால்,

# பெரியார் பெருந்தொண்டு

என்னும் நூலை வாங்கி வாசியுங்கள்!
உங்கள் நண்பருக்கும் பரிசாக வழங்குக!

விலை அணா 8.

9-அணா ஸ்டாம்பு அனுப்பினால் ஒருபுத்தகம் புக்போஸ்டில் அனுப்பப்படும்.

கிடைக்குமிடம்:—

பூங்கொடிப் பதிப்பகம்,
43-சென்தெரோஸ்வீதி, புதுச்சேரி.

## ஆள்தேடுபடலம்!

(2-ம் பக்கத்தொடர்ச்சி.)

முன் என்சொல்கேட்கட்டும் என்றுகூறி விட்டேன். நண்பர் முன்னின்று நடத்தும் நாடகத்திலே பத்துக் காட்சிகள் நடைபெற்றுவிட்டன, இனி நடக்கநாலு காட்சிகள் உள்ளன, அத்தோடு நாடகம் முடிவடையும். அவருக்குமறதி இருக்கும், எனவே நாடகத்தை நினைப்பூட்டுகிறேன்.

1. கோபாவேசப்படலம்.
2. கூலிக்கு ஆள்தேடுபடலம்.
3. காவடிதூக்குபடலம்.
4. கனதனவான் பேச்சுப்படலம்.
5. சேலம் சேதிப்படலம்.
6. விருந்துபசாரப்படலம்.
7. பேரம்பேசும்படலம்.
8. மாநாட்டுப்படலம்.
9. தலைதப்பியபடலம்.
10. திரைமறைவுப்படலம்.

எனப்பத்துப்படலங்கள் நடந்தேறி விட்டன. இனி நடக்கவேண்டியவை நான்கு!

11. ஆள்தேடு படலம்
12. ஆள்வோரிடம் சாடிகூறுபடலம்
13. அம்பலத்தாடு படலம்
14. அழிவுப் படலம்

இவைகளை ஆசிரியர், எவ்வளவு விரைவிலே நடத்திக்காட்ட விரும்பினாலும், திராவிடர்கள் காணத்தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மண்டலம் இருக்கிறது மன்னர் மட்டுமே இல்லை! கட்சி இருக்கிறது, தலைவர் இல்லை! அவசரமாகத்தேவை, ஒருதலைவர் என்று எழுதிவிட்டார் நண்பர் பி. பா. மெத்தச்சந்தோஷம்! அவருக்கு உதவியாக இருக்குமென்று கீழ்க்கண்ட விளம்பரத்தைத் தருகிறேன், அடுத்த இதழில் வெளியிடலாம்.

தேவை! தேவை!

அவசரமாகத் தேவை

வீரர்களால் துவக்கப்பட்டு, இன்று தலைவரின்றி, என் ஆபீஸ் தாழ்வாரத்திலே கிடக்கும் கட்சிக்கு ஒரு தலைவர் அவசரமாகத் தேவை. விண்ணப்பத்தை விரைவிலே அனுப்புக! இரகசியமாக வைத்துக்கொள்ளப்படும்.

யோக்கியதாம்சம்.

1. ஜனங்களுடன் அதிகமாகப் பழகி மதிப்பை மறக்கக்கூடாது.

2. கடற்கரை, மைதானம் ஆகிய இடங்களிலே பொதுக்கூட்டம் நடத்தக்கூடாது. பெரியவிருந்து மண்டபங்களிலேதான் கூட்டம் நடத்தவேண்டும்.

3. ஆங்கில, தமிழ்தினசரிகள் நடத்த மாதா மாதம் ஒரு தொகை தரவேண்டும்

4. ஆள் அம்பு செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

5. தோட்டக்கச்சேரிகள், துரைமார்களுக்கு விருந்துபசாரம், டின்னர் டீ பார்ட்டிகள் ஆகியவற்றை விமரிசையாக நடத்திவர வேண்டும்.

6. பரம்பரை ஜெமீன்தாரராகவோ, இல்லை என்றால் நல்ல வருவாயுள்ள மிராசுதாரராகவோ இருக்கவேண்டும்.

7. யாரையும் தழுவிச் செல்லும் மனப்பான்மை இருக்கவேண்டும். (ஆண்கள்விஷயமாகமட்டுமே இந்த விதி.)

8. காங்கிரசைக் கண்டிக்கக் காரமாகப் பேசுபவர்களை அமர்த்தவேண்டும் அதைமொழி பெயர்த்துச் சர்க்காருக்கு அனுப்பிவைக்கவும், பிறகு அதைப்பற்றி துப்புஅறியவும் ஒரு தனிஇலாக்காவை ஏற்படுத்த வேண்டும்.

9. உத்யோகம் வேண்டும் என்று கருதுபவர்கள், மேல் உத்யோகத்தை நாடுபவர்கள், பட்டம் வேண்டுபவர்கள் ஆகியோருக்கு"நல்வாக்கு" கூறிவரவேண்டும். அவர்களிடம் கட்சிவளர்ச்சிக்குப் பணம் திரட்டலாம்.

10. மறந்தும்மூன்றும் வகுப்பு வண்டியில் ஏறக்கூடாது.

11. மூலைமுடுக்கு ஊர்களுக்குப்போகக்கூடாது.

12. மதவிஷயத்தில்தலையிடக்கூடாது.

### எதிர்பார்க்கப்படும் பலன்கள்.

1. பதவிகள்கிடைக்கும்.
2. பட்டங்கள் உண்டு.

தலைவர் தேவை!—என்பது மேலே காட்டியபடி விளம்பரப்படுத்தப்பட்டு ஆள்தேடுபடலம் ஆரம்பமாகும், ஆரம்ப நன்னாளை ஆவலோடு எதிர்பார்க்கிறேன்.

## திருமணம்.

திருப்பூர், பிரபல கலர் வியாபாரியும், நமது இயக்கஅன்பருமானதோழர் S. S. செட்டியாரின் புதல்வி, சீதாபாயிக்கும், அங்கேரிபாளையம் அரங்கசாமி செட்டியார் மகன் R. முத்துசாமிக்கும் R. S. புரம் தோழர் S. R. சுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் ரிஜிஸ்தர் திருமணம் நடைபெற்றது. அதற்குத் தோழர் G. D. நாயுடு தலைமைவகித்தார். தோழர்கள் திருப்பூர் K. S. இராமசாமிக் கவுண்டர் M. L. A; ராவ்பகதூர் M. N. சிக்கண்ணசெட்டியார், S. R. சுப்பிரமணியம், கிருஷ்ணசாமி செட்டியார், J. S. கண்ணப்பர் முதலியோர் சீர்திருத்த ரிஜிஸ்டர்திருமணத்தைப்பாராட்டிப்பேசினர். நண்பர்கள், பந்துக்கள் அநேகர் திருமணத்திற்கு வந்திருந்தனர். மேற்படி திருமணத்தை முன்னிட்டு தோழர் S. S. செட்டியாரால் "குடி அரசுக்கும்" "திராவிடநாட்டுக்கும்" முறையே ரூபா 5. நன்கொடை அளிக்கப்பட்டது.

## பகை சாடுவோம்.

(புதுவைச் சிவம்.)

[ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே என்ற மெட்டு]

கூடுவோமே பகை சாடுவமே—தமிழ்க்
குலமினி தோளிர்ந்திட வேண்டியோன்றாக (கூடு)

கூடுவோம் வேங்கடம் குமரிமுதல்—ஒன்று
கோடுஞ்செய லாரியர் சூழ்ச்சியெல்லாம் ஏகக் (கூடு)

சீரிய செந்தமிழ் வாழ்வழித்தே—பொல்லாத்
தீய மதந்தனை நமக்களித்தார்!—எலாம் (கூடு)

சாதியும் பேதமும் தகர்த்திடுவோம்—நல்ல
சமதர்ம நெறிபெற்று வாழ்ந்திடுவோம்!—அன்பாய் (கூடு)

பாதகம் புரிந்திடும் ஆரியர்கள்—நமைப்
படுத்திய கொடுமைகள் போதும் போதும்!-இனித் (கூடு)

போர்ப்புலி துயில்கொண்ட காலமினி-இல்லை!
புதர்விட்டு வெளிவரும் நாளிதென்றே சொலிக் (கூடு)

# நமது முன்னணி வேலை.

C. N. அண்ணாத்துரை.

தோழர்களே!

சேலம் மாநாடு சம்மந்தமாக, வரவேற்புக்கழகத்தலைவரும் காரியதரிசிகளும் வெளியிட்டுள்ள அறிக்கையைக் கண்டேன். காரியதரிசிகளில் ஒருவரான வக்கீல் தோழர் C. G. நெட்டோ அவர்களின்போக்கு, எனக்கு ஆச்சரியமூட்டவில்லை, அதைநான் எதிர்பார்த்திருந்தேன். வரவேற்புக் கழகத்தலைவர் தோழர் சேர்மன் இரத்தினசாமி அவர்களும், மற்றொரு காரியதரிசி தோழர் கணேசசங்கர் அவர்களும் இந்தப்போக்கை ஆதரிக்கும் நிலை என்னைத் திடுக்கிடச்செய்தது. அவர்களிடம்நான் இதனைஎதிர்பார்க்கவில்லை. சிறப்பாகச் சேர்மன் இரத்தினசாமி அவர்களை, நான்திராவிட விடுதலைப்போருக்குச் சரியான ஓர் தளபதி, பெரியாரின் பெருநண்பர், என்றே கருதிவந்திருக்கிறேன். அவருடையதீரத்தைப்பலதடவை பாராட்டியிருக்கிறேன். அவர் இந்தச் சுழலிலே சிக்கியது, எனக்குச்சற்றுவருத்தந்தான். தோழர் நெட்டோ அவர்களின் போக்கு எனக்கு ஆச்சரியமூட்டவில்லை. ஏனெனில், மாநாடு நடைபெறுவதற்குப்பலமாதங்கட்கு முன்பு, கோவைத்தோழர் G. D. நாயுடு அவர்கள் திருமகளாரின் திருமணத்தன்று அவரைக்கண்டபோது, "மாகாண மாநாடுஏன்? கட்சிஏன்? எனக்குக் கட்சியில் இருக்க விருப்பமில்லை. கட்சி சரியாக வேலைசெய்வதில்லை" என்று சலித்துக்கொண்டு, பேசினார் கேட்டுக்கொண்டிருந்த எனக்குச் சலிப்பும் காதுவலிப்பும் வரும் அளவுக்கு. எனவே அவர் மாநாட்டின்போதும், பிறகும்,காட்டிடும்போக்கு எனக்கு ஆச்சரியமூட்டவில்லை. எப்போதோ ஓர்சமயம் கட்சியிலே கலந்துகொள்பவர்கள், இதைத்தானே செய்யமுடியும். எனவே அவருடையபோக்குப்பற்றிநான் கவலைகொள்ளவில்லை.

மாநாட்டுக்கு முன்னாள் இரவு, என்னுடன், வரவேற்புக்கழகத்தோழர்கள்ஏதோ ஓர் ஒப்பந்தத்திற்கு வந்ததாகவும், பிறகு அது மீறப்பட்டுவிட்டதாகவும், ஒரு செய்தியைச் சண்டே அப்சர்வர் வெளியிட்டிருக்கிறது. ஒருபெரிய கட்சியின் எதிர்காலத்தைப்பொறுத்த முக்கியமான பிரச்னை விஷயமாக என்னுடன் "ஒப்பந்தத்திற்கு" வந்ததாகக்கூறுவது, என்னால் தாங்கிக்கொள்ளமுடியாதகௌரவம்! உண்மையிலே, ஒப்பந்தம் எதுவும் நடைபெறவில்லை, உரையாடல் நடந்தது. அதுவும் பெரியார் வருவாரென்று அவர்கள் எதிர்பார்த்திருந்து அவர் வாராததால் என்னுடன் நடந்தது. அவ்வளவே! ஒப்பந்தம் என்ற வார்த்தை பொருளின்றி உபயோகப்பட்டிருக்கிறது.

மாநாடு நடைபெறுவதற்குச் சிலதினங்கட்குமுன்னால் சென்னையிலே பல நண்பர்கள், சண்டே அப்சர்வர் ஆசிரியரின் முயற்சியால், சேலத்திலே, பெரியாரைத் தலைமைப்பதவியிலிருந்து நீக்கும்ஏற்பாட்டைநடத்துவதாகக்கூறினார்கள். நான் சிரித்தேன்! நண்பர்கள் கோபித்துக்கொண்டனர். பெரியாரை, இன்னம் ஓரிரண்டு ஆண்டுகளுக்கேனும் இக்கட்சியின் தலைமைப்பதவியை வகித்திருக்க வேண்டும் என்று வற்புறுத்திக்கொண்டிருக்கிறேன் நான். அவரைநீக்க இங்கே முயற்சி நடக்கிறதா! வேடிக்கைதான், என்றுகூறிவிட்டு, இந்த மாநாடு, கட்சியின் போக்கை மாற்றி அமைக்கவே நடைபெறுகிறது, சண்டே அப்சர்வரின் ராஜதந்திரத்துக்கு அல்ல என்று கூறினேன்.

சேலம் மாநாட்டுத்தேதி நெருங்க நெருங்க, விதவிதமான வதந்திகள் உலவின.வதந்திகளைப் பிறப்பித்துக்கொண்டு சில உருவாரங்கள் உல்லாசமாக உலவியும் வந்தன.

இந்நிலையிலே, நான் தலைவர்பாண்டியனாருக்கு நிலைமையை விளக்கியும், சேலம் மாநாட்டிலே யாதுசெய்தல் முறை என்பதை எனக்குத்தெரிவிக்கும்படியும் கடிதம் எழுதினேன். அதற்குக்காரணம் இச்சம்பவங்கட்குப்பல மாதங்கட்கு முன்பு, கட்சியின் எதிர்காலம் எப்படி இருக்க வேண்டும் என்பதுபற்றி, பெரியாருடன் பாண்டியனாரும் நானும்பேசி ஒருமுடிவிற்குவந்திருக்கிறோம். அந்த முடிவின் முக்கியாம்சம்,

1. திராவிடர் கழகம் என்று பெயர் மாற்றுவது.
2. சுயமரியாதைக் கோட்பாடுகளை அதிலே புகுத்துவது.
3. அமைப்பைப் பலப்படுத்துவது.

இதுவிஷயமாகவே தலைவர் பாண்டியனாருடன் நான் கடிதப்போக்குவரத்து வைத்துக்கொண்டேன். வதந்திகளைக் கருவிலேயே சிதைக்க, இந்தக் கடிதப் போக்குவரத்து மெத்த உதவியாக இருந்தது.

தலைவர் பாண்டியனவர்கள், ஈரோட்டிலே பேசியதைச் சேலத்திலே நிறைவேற்றவேண்டும், என்று எனக்குத்தெரிவித்து, அதற்கான வேலைத்திட்டத்தைத் தீட்டி அனுப்புமாறுபணித்தார்கள்; செய்தேன்.

இடையே, சேலம் மாநாட்டு வரவேற்புக்கழகச் செயலாளர் தோழர் நெட்டோ அவர்கள் பெரியார் எதிரிலேயே, தாக்கிப்பேசியதாகவும், மாநாட்டிலே பாண்டியன் அவர்களைத் தலைவராகப் பிரேரேபிக்க ஏற்பாடுசெய்வதாகவும் கேள்விப்பட்டு, அந்தத்தகவலையும் தலைவர்பாண்டியன் அவர்களுக்கு அறிவித்தேன் கடிதமூலம். பிறகு பெரியாரைக் கண்டேன்.

"எனக்கேன் இந்தச் சனியன். நான் மாநாட்டுக்கே போவதில்லை: கட்சியை யாரேனும் நடத்தட்டும்" என்றார் பெரியார். நான் வாதாடினேன். பிறகு "கட்சியை நாம்நடத்த ஆரம்பித்ததால், மக்கள் திரண்டுவிட்டார்கள், அவர்களை அரசியல் சூதாடிகளிடம் விடுதல்கூடாது. நமது முயற்சியால், பட்டம்பதவி கோருவோர் கட்சியை விட்டுவெளிஏறச்செய்யவேண்டும். தன்மானக்கொள்கைகளைத் நுழைக்கச்செய்யவேண்டும். ஜஸ்டிஸ்கட்சி திராவிடர் கழகமாகவேண்டும். இதுவேதான் பாண்டியனாரின் கருத்தும், என்பதைக் கூறினேன். பெரியார் சம்மதித்தார்என் வேண்டுகோளுக்கு.

பிறகு பாண்டியனாரின் கடிதம்கிடைத்தது. நமக்குத்தலைவர்நமது பெரியாரே! என்பெயரைச் "சிலஅறிவிலிகள்" உபயோகித்தால்நான்என்னசெய்வது"என்ற கருத்துடன்.

நான் மாநாட்டுக்குப் பட்டம் பதவிகளை விட்டுவிடும் தீர்மானத்தை அனுப்பினேன், பாண்டியனாருக்கும் அதனையும் அதன் அவசியத்தை விளக்கியகடிதத்தையும் அனுப்பினேன், திருவாரூர் சென்றேன், நாடகத்துக்கு.

திரும்பினேன், தலைவர் பாண்டியன் அவர்கள், என் தீர்மானத்தை ஆதரித்தும், அதை அமுலுக்குக் கொண்டுவரத்தக்கமுறையிலே அமைப்புவேண்டுமென்றும் எழுதியகடிதம்கிடைத்தது, களித்தேன்.

மாநாட்டுக்கு முன்னாள் மாலை சேலம் சென்றேன். ஏற்கனவே அங்கு, தோழர்கள் பாண்டியன், V. V. இராமசாமி, சண்டேஅப்சர்வர், K. A. P. விசுவநாதன் ஆகியோர், வந்திருந்தனர்.

மாலையிலே நியூ சினிமாவிலே "தாசி அபரஞ்சியைக்" காணச்சென்றேன், பாண்டியனாரையும், நண்பர்கள் V. V. இராமசாமி, K. A. P. விசுவநாதன் ஆகியோரைக்கண்டேன். எல்லோரும் அபரஞ்சியைக்கண்டோம், வீடுதிரும்பினோம். இடையில், பெரியாருக்குத் தந்தி கொடுத்திருப்பதாகவும், விடுதிக்கு வந்தால், மாநாட்டிலே, என்ன செய்வது என்பதைப்பற்றிப்பேசலாம் என்றும் யோசனை கூறினார் பாண்டியனார். சரி.

(12-ம்பக்கம் பார்க்க)

# நமது முன்னணி

(11-ம் பக்கத் தொடர்ச்சி.)

என்றேன். பெரியார் வரவில்லை, நானும் படுத்துக்கொண்டேன். 10-30 மணிக்கு மேல் நண்பரொருவர், என்னைப் பாண்டியனார் அழைப்பதாகக்கூறினார். நானும் A. K. தங்கவேலரும் சென்றிருந்தோம். மாநாட்டு வரவேற்புக்கழகத் தலைவரும் காரியதரிசிகளும் வந்தபிறகு, எல்லோருமாகப்பேசினோம்.

"மாநாட்டிலே கலகம்வராமல் பார்த்துக்கொள்ளவேண்டும்" என்று சண்டே அப்சர்வர் கூறினார். "கலகம் என்வரப்போகிறது?" என்று நான் கேட்டேன். "வதந்திகள் உள்ளன' என்றார் அவர். "தவறு" என்றேன் நான்.

"தீர்மானங்களைத் தொகுத்துஒழுங்குபடுத்துவோம்" என்று நான் செயலாளர் நெட்டோ அவர்களுக்குச் சொன்னேன். "அது மாநாட்டிலே பார்த்துக்கொள்வோம், பட்டம்பதவித் தீர்மானத்தைப்பற்றிப்பேசி ஒரு முடிவுக்குவரலாம் இப்போது" என்றார் அவர். "தாராளமாகப்பேசுவோம்" என்றேன். பேசினோம். இடையிடையே காரம்! கடைசியாகப் பாண்டியனாரின் அறிக்கையின்படி தீர்மானத்தை அமுலுக்குக்கொண்டுவரும்தேதியை வைத்துக்கொள்ளலாம் என்று முடிவுசெய்யப்பட்டது. பிறகு, பெயர் மாற்றுவதுபற்றியபேச்சு நடந்தது. அந்த விஷயத்திலே, அதுசமயம் நண்பர் பாலசுப்பிரமணியம் சொன்னது ஒன்றுதான், அதாவது ஆந்திரர், கேரளர் ஆகியோரின் கருத்துதெரியாமல் எப்படிப்பெயரை மாற்றுவது என்பதுதான்.

"ஆந்திரநாடுசெல்லக்கூடியதாங்களும், கேரளம் செல்லக்கூடியநண்பர்நெட்டோ அவர்களும், இதைச்செய்திருக்கவேண்டும், இனியேனும் செய்யுங்கள், அதைவிட்டு தமிழ்நாட்டிலே வேலைசெய்யும் எங்களைத்தாக்க இதனையும் சாதகமாக்குகிறீர்களே, சரியா" என்று நான் கேட்டேன். புன்னகையைத்தான் சண்டே அப்சர்வர் பதிலாகத்தந்தார். நண்பர் நெட்டோ அவர்கள் "எனக்கு மலையாளம் மறந்தேபோச்சே" என்றார்!

பிறகு, அரசியலிலே மதப்பிரச்னைகலக்கக்கூடாது என்று தலைவர் V. V. R. அவர்கள்பேசும் பிரச்னை விவாதிக்கப்பட்டது. இந்த விஷயத்திலே நாங்கள் ஒரு துளியும் விட்டுக்கொடுக்கமுடியாது. சுயமரியாதைக் கோட்பாடுகளைப் பரப்பாமல், இருக்கமாட்டோம். ஜஸ்டிஸ் கட்சியிலே அவை இடம்பெற்றேதீரவேண்டும், எங்கள் குறிக்கோள் சமுதாய சீர்திருத்தமே—என்று நான் வாதாடினேன், பாண்டியனார் இடையிடையே என்னை ஆதரித்துப்பேசினார், பிறகு இவைபற்றிக்காலையிலே, மாநாடு கூடுமுன் பெரியாரும்-பாண்டியனாரும்பேசுவது, என்ற முடிவுடன், எங்கள் உரையாடல் முடிந்தது. இவ்வளவுபேச்சு நடக்கும்போதும், நண்பர் K. A. P. விசுவநாதம் அவர்கள் கலந்துகொள்ளவில்லை, படுத்துக்கொண்டிருந்தார், பாண்டியனாரிடம் முழுப்பொறுப்பும் ஒப்புவித்துவிட்டேன்என்று. வரவேற்புக்கழகத்தலைவர் தோழர் இரத்தினசாமி அவர்கள், 10-30யிலிருந்து 4-மணி வரை நடைபெற்ற பேச்சிலே ஒரே ஒருவாசகம் கூறினார், "முடிந்ததா அண்ணா! போய்ப்பந்தலிலே வாழைமரம் கட்டவேண்டும்" என்பதுதான் அவர் பேசியவாசகம்!

இதைத்தான் சண்டே அப்சர்வரில் "ஒப்பந்தம்" என்று எழுதி இருக்கிறார்கள். இது உரையாடல்! மூன்று தீர்மானங்களைப்பற்றிய பேச்சு. மறுதினம் காலையிலே பாண்டியனாரும் பெரியாரும் பேசினார்கள், முன்னாள் இரவு பேசப்பட்ட விதமாகவே காரியத்தை நடத்துவது என்று. மாநாட்டிலும், அவ்விதமே நடந்தேறியது. எல்லாம் முடிந்தபிறகு, எதையும் செய்யமுடியாது போன கூட்டம் ஏதாவது செய்வோம், என்று, மாநாட்டிலே முறையில்லை என்றும், ஒப்பந்தம் மீறப்பட்டது என்றும் அறிக்கை வெளியிட்டிருக்கிறது. அறிக்கைகள் மட்டுமே வெளியிடத் தெரிந்தவர்கள், அதையேனும் செய்து தங்கள் ஆசையைத் தீர்த்துக் கொள்ளட்டும். நமக்கோவேலை மிகுதியாக இருக்கிறது ஆகவே, ஆள் தேடிகளைப்பற்றிக் கவலைப்படாமல் ஆங்காங்கு திராவிடர் கழகங்களை அமைத்துப் பலப்படுத்துங்கள். திராவிடநாடு திராவிடருக்காக வேண்டும், அதுவே நமது முன்னணி வேலை. பல "தலைவர்கள்" மாநாட்டுக்கு வரவில்லை, எனவே மாநாடு பிரதிநிதித்துவம் வாய்ந்ததல்ல என்று சண்டே அப்சர்வர் எழுதுகிறது. வராத தலைவர்களுக்குத் திராவிடரின் விடுதலையிலே அக்கரை இல்லை எனவே அவர்கள் திராவிடர் கழகத்துக்குத் தேவை இல்லை, என்று கழகம் முடிவு செய்கிறது என்று எழுத அதிக நேரம் பிடிக்காது. நம்முடைய வேலை வீண் வீம்பு அல்ல. மாநாட்டிலே மதமே கூடாது என்று நான் பேசியதாகவும், திராவிடர் கழகம், மதமற்றவர்களின் கட்சி என்றும், சண்டே அப்சர்வர் கூறுகிறது. இது சர்க்காருக்குக் கலக மூட்ட உதவும். சர்க்காரும், மதமில்லாதவர்களா! என்று கேட்டு திராவிடர் கழகத்தை அடக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளக்கூடும். நாம் அதற்கு அஞ்சப்போவதில்லை. அன்று மாநாட்டிலே நான் பேசியது, இன்று நமது தலைமீது சுமத்தப்பட்டிருக்கும் ஆரிய மார்க்கத்தை நாம் அறவே நீக்கவேண்டும் என்பதுதான். இதைத்திரித்துக்கூறிச் சர்க்காரின் திருஷ்டி என்மீது விழும்படியாகச் செய்வதன் மூலம், நண்பர் பாலசுப்ரமணியனார் திருப்தி அடையவிரும்பினால், நான் அதனைத் தடை செய்ய விரும்பவில்லை. நான் ஆங்கிலப்பிணைப்பிலும் ஆரியவலையிலும் வடநாட்டு ஆதிக்கத்திலும் சிக்கியுள்ள திராவிடநாடு முழுதுமே இன்று ஓர் சிறைக்கூடமாக இருப்பதாகவே கருதுகிறேன். எனவேமதமற்றவர்கள் நாஜிகள், ஒத்துழையாதார், என்ற பழிகள் சுமத்தி சர்க்காரைத் தூண்ட சண்டே அப்சர்வர் முயன்றால், அதுகண்டு கலங்குபவர்கள், தன்மான இயக்கத்தவர்கள் அல்ல என்று கூற விரும்புகிறேன்.

பெரியாரும் அவருடைய கோஷ்டியாரும் ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து நீக்கப்பட்டார்கள் என்று எழுதியிருப்பதும், மக்களுக்கு அந்த ஆசிரியர் கூறும் வாசகமாகான் கொள்ளவில்லை. சர்க்காருக்குத்தான் அதையும் சொல்லுகிறார்,

பட்டம் பதவி கூடாது என்று ஜஸ்டிஸ் மாநாட்டிலே கூறிவிட்டார்களே என்று எண்ணி, பட்டம் பதவிகளைத் தாராமல் இருந்துவிடாதீர்கள், அவைகளைப்பெறுவதற்கு நாங்கள் இருக்கிறோம், இதோ ஜஸ்டிஸ் என்ற பெயருடன் கட்சியைக்கூட்டுகிறோம், பெரியாரும் அவரைப்பின்பற்றுபவர்களும், இனி ஜஸ்டிசில் இல்லை, ஆகவே தயக்கமின்றி துரைமார்கள் தயவுகாட்ட முன்வாருங்கள்! என்று, தூது சொல்லுகிறார், ஆசிரியர். தாராளமாகச் செய்யட்டும்.

பெயர் மாற்றம், சு. ம. கொள்கை புகுத்துதல் ஆகியவைபற்றிப்பக்கம்பக்கமாக எழுதிய ஆசிரியர், பட்டம் பதவிகளைவிட்டு விடுவதுபற்றி, ஏன் ஒரு வரிகூட எழுதவில்லை! அவர் நடத்தப்போகும் ஜஸ்டிஸ் கட்சியைப்பார்த்து மக்கள் கேட்கப்போகும் முதல் கேள்வி,

**"பட்டம் பதவிகளை நீங்கள் விட்டு விடுவீர்களா, கெட்டியாகப் பிடித்துக் கொண்டு இருக்கப்போகிறீர்களா? என்பதுதான்!**

## சிறந்த சீர்திருத்தவாதி மறைவு

திருச்சி, பாலக்கரை, மஞ்சனக்காரத் தெருவில் இலங்கும் பகுத்தறிவு நிலையத் தாபகரும், தலைவருமான தோழர் வெ. குருநாதம் அவர்கள் சின்னாள் நோய் வாய்ப்பட்டிருந்து 18—8—44 வெள்ளிக்கிழமை யன்று தஞ்சை ஜில்லா மன்னார் குடியைச்சேர்ந்த நெடுஞ்சேரிக் குடியிலுள்ள தமது இல்லத்தில் இயற்கை எய்தினார். அன்னவரின் நினைவு நாளை அவர் மருகன் திரு. K. S. வாசன், அவர்களால் மஞ்சனக்காரத்தெருவில் இருக்கும் பகுத்தறிவு நிலையத்தில் கொண்டாடப்பட்டது.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.